விலை ரூபா: 8.00 *Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 மாசி 04 புதன்கிழமை (16.02.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 59

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

## மட்டக்களப்பில் நேற்று இளைஞன் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கொம்மாந்துறைப் ஆட்பணிச்சேனையைத் சேர்ந்த 22 வயதுடைய இளைஞனொருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

பொபி என்று அழைக்கப்படும் சங்குநாதன் சசி என்ற இளைஞரே சுட்டுக் கொல்லப்பட்டவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் மத்திய கிழக்கு நாடொன்றில் தொழில் பார்த்துவிட்டு மூன்று மாதங்களுக்கு முன்பே நாடு திரும்பியிருந்தார்.

மோட்டார் சைக்கிளில் மற்றொருவருடன் சென்றுகொண்டிருந்த சமயம் இன்னொரு மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்த நபர்கள் இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்தக் கொலை தொடர்பாக ஏறாவூர் பொலிசார் வெளியிட்ட தகவல்களின்படி தமது விசாரணையின் போது பிரஸ்தாப இளைஞர் விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர் எனத் தெரியவருவதாகத் தெரிவித்தனர்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறையினர் தகவல் தருகையில், படுகொலை செய்யப்பட்டவருக்கும் தமது அமைப்புக்கும் எவ்வித தொடர்பும் இல்லை எனத் தெரிவித்தனர். (இ-04)

## கூட்டுறவாளர்கள் நேற்று நகரில் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

வெலிகந்தப் பகுதியில் விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், மாமனிதர் அரியநாயகம் சந்திரநேரு மற்றும் நான்கு போராளிகள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசின் ஒதுக்கீடுகள் வழங்கப்படாமைக்கு ஆட்சேபம் தெரிவித்தும் நேற்று யாழ். மாவட்ட கூட்டுறவாளர்களினால் கண்டனப் பேரணி நடாத்தப்பட்டது.

காலை 10 மணிக்கு அனைத்துக் கூட்டுறவாளர்களும் நல்லூர் சங்கிலியன் சிலைக்கு முன்பாக ஒன்றுகூடி பதாகைகளை தாங்கியவாறு பேரணியாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்ட அலுவலகத்தைச் சென்றடைந்தனர்.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கத் தலைவர் கே. கனகசபாபதி, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்ட அதிகாரி ரொனி பேசனிடம் மகஜர் ஒன்றை கையளித்தனர்.

அத்துடன் யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் தலைவர் செல்வகுமார், பெண்கள் பண்பாட்டு மையத்தின் இணைப்பாளர் திருமதி சிவரதி, யாழ். மாவட்ட மகளிர் அமைப்புக்களின் தலைவி இந்திராணி தங்கராசா (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.ம.சு. முன்னணி அரசில் இருந்து ஜே.வி.பி. ஒருபோதும் விலகாது!

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசிலிருந்து ஜே. வி.பி. ஒருபோதும் விலகமாட்டாது. இது தொடர்பில் ஜே. வி. பி. எந்தவொரு தீர்மானத்தையும் இதுவரையும் எடுக்கவில்லை.

இவ்வாறு ஜே. வி. பி. பாராளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் கட்சியின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தினார். (௨ ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரநேரு குடும்பத்தினரை தமிழ்ச்செல்வன் சந்தித்தார்

(மட்டக்களப்பு)

அண்மையில் படுகொலை செய்யப்பட்ட மாமனிதர் அரியநாயகம் சந்திரநேருவின் குடும்ப உறுப்பினர்களை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

பழுகாமத்திலுள்ள உள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகம் ஒன்றில் இச் சந்திப்பு நடைபெற்றது.

இச் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், சந்திரநேருவின் மறைவு குறித்து தமது கவலையையும் அனுதாபத்தையும் வெளியிட்டார்.

அன்னார் தமிழ்த் தேசியத்துக்காக ஆற்றிய பணியினையும் அவர் நினைவு கூர்ந்தார். (இ-04)

## கிளிநொச்சியில் பேரணி

தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

பழுகாமத்திலுள்ள உள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகம் ஒன்றில் இச் சந் அன்னார் தமிழ்த் தேசியத்துக்காக ஆற்றிய பணியினையும் அவர் நினைவு கூர்ந்தார். (இ-04)

# பெண் சிசுவின் சடலம் வெளிவளவில் இருந்து மீட்பு

(வட்டுக்கோட்டை)

உயிரிழந்த நிலையில் பெண் சிசுவின் சடலமொன்று நேற்று வட்டுக்கோட்டைப் பொலிசாரால் மீட்கப்பட்டது.

வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாசாலைக்கு முன்பாக உள்ள வெளிவளவிலிருந்தே மேற்படி சடலம் மீட்கப்பட்டது.

நேற்றையதினம் பிரசவமான குழந்தையே உயிரிழந்த நிலையில் அப்பகுதியில் வீசப்பட்டிருக்கலாமென அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

சம்பவ இடத்துக்கு வந்த மல்லாகம் மாவட்ட பதில் நீதிவான் எஸ். வசந்தசேனன் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டார்.(இ-39)

# கிளிநொச்சியில் பேரணி

(கிளிநொச்சி)




மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப். கேணல் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகள் மற்றும் மாமனிதர் அரியநாயகம் சந்திரநேரு ஆகியோர் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து நேற்று கிளிநொச்சியில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று முற்பகல் 9.30 மணியளவில் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபம் முன்பிருந்தும் கிளிநொச்சி முருகன் ஆலயம் முன்பிருந்தும் இரு அணிகளாக ஆரம்பித்த பேரணிகள் கிளிநொச்சியில் அமைந்துள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக் (12 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் நேற்றும் வெகுஜனப் போராட்டம்

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப். கேணல் கௌசல்யன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு அரியநாயகம் உட்பட 6 பேரின் படுகொலையைக் கண்டித்து நேற்று முன்தினமும் நேற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாபெரும் வெகுஜனப் போராட்டங்கள் நடைபெற்றன.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கொக்கட்டிச்சோலை மற்றும் போரதீவு ஆகிய இடங்களில் நடைபெற்ற இந்தப் போராட்டங்களில் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் கலந்துகொண்டனர். நேற்று

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மன்னாரில் ஆர்ப்பாட்டம்

(மன்னார்)

மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் லெப். கேணல் கௌசல்யன் உட்பட்டோர் சுட்டுக் கொல்லப்பட்டமையைக் கண்டித்து நேற்று மன்னாரில் ஆர்ப்பாட்டமும் ஹர்த்தாலும் நடைபெற்றது.


ஹர்த்தால் காரணமாக வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்ததோடு போக்குவரத்தும் பாதிக்கப்பட்டிருந்தது. அனைத்து திணைக்களங்கள், பாடசாலைகள் என்பனவும் மூடப்பட்டிருந்தன.

கண்டனப் பேரணியில் வன்னி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவநாதன் கிஷோர், சிவசக்தி ஆனந்தன், எஸ். விமல் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கண்டனப் பேரணியில் ஆயிரக் கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். பேரணியினை அடுத்து மன்னார் பஸ்நிலையத்தில் பொதுக்கூட்டம் ஒன்றும் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. (12 ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**





## பல்கலைக்கழகத் தெரிவுக்காக

# க.பொ.த [உ/த] பரீட்சைக்குப் பின் புதிய பரீட்சையை நடாத்த உத்தேசம்

(கொழும்பு)

உத்தேச கல்வி மறுசீரமைப்புத் திட்டம் தொடர்பாக நாட்டில் பாரிய எதிர்ப்புத் தோன்றியுள்ளதாக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் சங்கம் தெரிவித்துள்ளது.

தனியார் பல்கலைக்கழகம் ஒன்றை ஆரம்பிப்பது உட்பட உயர்தரப் பரீட்சைக்குப்பின்னர் பல்கலைக்கழகத் தெரிவுக்காக மறறொரு புதிய பரீட்சையை அறிமுகப்படுத்த உத்தேசித்திருப்பது போன்றவை பல பிரச்சினைளை உருவாக்கியுள்ளதாக மாணவர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

மாறி மாறிப் பதவிக்கு வரும் அரசாங்கங்கள் அனைத்தும் 'கல்வி மறுசீரமைப்புத் திட்டம்' என்ற பெயரில் பாரிய பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளதாகவும் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.


கல்வித் துறையைத் தனியார் மயப்படுத்துவதில்லையென்று உறுதியளித்து பதவிக்கு வந்த கூட்டமைப்பு அரசாங்கம், அவ்வாறான ஒரு நடவடிக்கையில் ஈடுபடுமாயின் அது பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என சங்கத்தின் சார்பில் துமிந்த நாகபோவ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் றஞ்சித் மெண்டிஸ் தகவல் தெரிவிக்கையில், பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் குற்றச்சாட்டு அர்த்தமற்றது என்றார்.

பல்கலைக்கழகத் தெரிவுக்காக நடாத்தப்படும் உயர்தரப் பரீட்சையை தொழில்வாய்ப்புப் பெறுவதற்கான நுழைவுப் பரீட்சையாக மாற்றுவது தொடர்பாக ஆராய்ந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உயர்தரப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்படும் 3 பாடங்களை 2 பாடங்களாகக் குறைத்து, மூன்றாவது பாடத்தை மாணவரின் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்ய சந்தர்ப்பம் அளிப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டு வருகின்றது.

அத்துடன், மறுசீரமைப்புக்கேற்ப உயர்தரப் பரீட்சை தவிர பல்கல்லைக்கழக நுழைவுக்கான விஷேட பரீட்சை ஒன்றையோ அல்லது பொதுப் பரீட்சை ஒன்றையோ நடாத்துவது தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டு வருவதாகவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் றஞ்சித் மெண்டிஸ் மேலும் தெரிவித்தார். (ற-7)



## அமைச்சர் போகொல்லாகம தொடர்பாக ஐ.தே.க எடுத்த தீர்மானம் சட்டவிரோதமானது

# உயர் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர், அமைச்சர் ரோஹித போகொல்லாகமவின் கட்சி உறுப்புரிமையையும் பாராளுமன்ற அங்கத்துவத்தையும் இரத்துச் செய்வதென ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொண்ட தீர்மானம் சட்டவிரோதமானது என உயர் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்துள்ளது.

இவ்வழக்கை விசாரித்த 3 நீதியரசர்களைக் கொண்ட குழு ஐக்கிய தேசியக்கட்சியின் தீர்மானம் சட்டரீதியாக செல்லுபடியற்றதென ஏகமனதாகத் தீர்மானித்துத். தீர்ப்பு வழங்கியுள்ளது.

இவ்வழக்கில் ஐ.தே.க.தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தவிசாளர் மலிக் சமரவிக்கிரம, செயலாளர் எம்.பி.கே.கே.வேரகொட, பாராளுமன்றச் செயலாளர் நாயகம் ஸ்ரீயானி விஜயசேகர, தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

ரோஹித போகொல்லாகமவை கட்சியிருந்த வெளியேற்றியமை தொடர்பாக ஐ.தே.கட்சி வெளியிட்டுள்ள ஆவணங்கள் சட்டபூர்வமாகச் செல்லுபடியற்றவை எனவும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

போகெல்லாகம சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி டி.எஸ்.விஜய சிங்க, ஐ.தே.கட்சி ஒழுக்காற்று நடவடிக்கைகளை கூடமேற்கொள்ளாது அவரைக் கட்சியில் இருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுத்தது எனக் குறிப்பிட்டார்.

கட்சியின் நிறைவேற்றுக் குழு மேற்கொண்ட தீர்மானத்தைஅவர் மீறியதால் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு அவசியம் இருக்க வில்லையென ஐ.தே.க.கட்சி சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி கே.எம்.சொக்ஸி கூறினார்.

அமைச்சுப் பொறுப்பை ஏற்று வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் அரசுடன் இணைந்து வாக்களித்ததன் மூலம் கட்சியின் யாப்பை அவர் மீறியிருப்பதாகவும் சொக்ஸி மேலும் தெரிவித்தார். (க-7)



# இளைஞர் படுகாயம்


(யாழ்ப்பாணம்)

லான்ட்மாஸ்டருடன் இடம் பெறவிருந்த விபத்தை தடுப்பதற்காக மோட்டார் சைக்கிளின் பிறேக்கை சடுதியாக பிடித்த போது அதிலிருந்து தூக்கிவீசப்பட்ட இளைஞர் படுகாயமடைந்தார்.

இச் சம்பவம் சண்டிலிப்பாய் சந்திக்கு அருகில் நேற்றுமுன் தினம் மாலை 4.00 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

படுகாயமடைந்த இளைஞர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-19)













புனானைப் படுகொலையைக் கண்டித்தும் அரசின் ஒதுக்கீடுகள் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படாமையை ஆட்சேபித்தும் யாழ்.மாவட்ட முச்சக்கர வண்டிகள சங்கம், மினிபஸ் சங்கம் மற்றும் மகிழூந்துச் சங்கம் என்பன இணைந்து நேற்று முன் தினம் நடாத்திய வாகனப் பேரணியையும் பேரணியின் இறுதியில் முச்சக்கர வண்டிகள் சங்கத் தலைவர் எஸ்.சிவராஜா, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்டத் தலைவர் றொனி பேர்சனிடம் மகஜரைக் கையளிப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: ஞா.ஐங்கரன்)

யாழ்.மாவட்ட கூட்டுறவாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்றைய தினம் யாழ்.நகரில் கண்டனப்பேரணி நடாத்தப்பட்டது.

இப்பேரணியில் கலந்து கொண்டோரையும் பேரணியின் இறுதியில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ். மாவட்டத் தலைவர் மற்றும் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் ஆகியோரிடம் மகஜர்கள் கையளிக்கப்படுவதையும் படங்களில் காண்க.

(படங்கள்: ஞா.ஐங்கரன்)

# புலிகள் சர்வதேச அங்கீகாரம் பெறுவதை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் வலியுறுத்து

(கொழும்பு)

**சர்வதேச நிதி நிறுவனங்கள் நேரடியாக வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதையும் வட, கிழக்கு புனர்நிர்மாணப் பணிகளுக்கு நேரடியாக புலிகளிடம் நிதியை வழங்க எடுக்கப்படும் முயற்சிகளையும் தடுத்து நிறுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை சந்தித்து வேண்டுகோள் விடுத்துள்ளது.**





தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் முக்கியஸ்தர்கள் கடந்த சனிக்கிழமை கொழும்பிலுள்ள வெளிநாட்டமைச்சரின உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை காலை 11.30 மணிககுச் சந்தித்து சுமார் 2 மணி நேரம் பேச்சுவார்த்தைகளை நடத்திய போதே மேற்கண்ட வேண்டுகோளை அவ்வியக்கம் விடுத்துள்ளது.

இப்பேச்சுகளில் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் எல்லே குணவன்ச தேரர் மற்றும் மத்திய குழு உறுப்பினர்களான விமல் வீரவன்ச, டாக்டர் குணதாச அமரசேகர, பேராசிரியர் உபாலி ஜயசேகர, சேனாரத்ன டி சில்வா, பியல் பராக்கிரம, சிரில் விக்கிரமகே ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஐ.நா. செயலாளர் கொபி அனான், மட்டக்களப்பில் படுகொலை செய்யப்பட்ட புலிகளின் உறுப்பினர்களான் கௌசல்யன் குழுவினரின் படுகொலைக்கு உத்தியோகபூர்வமான கண்டனத்தை வெளியிட்டமை எமது நாட்டின் சுயாதிபத்தியத்தை மீறும் செயலாகும் என்றும் அதனை ஏதிர்த்துத் தாம் கையளித்த மகஜரையும இதன்போது கையளித துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் கௌசல்யனின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு பேசுகையில், தமது போராட்டத்தை சர்வதேசம் அங்கீகரித்து விட்டதாகத் தெரிவிக்குமளவுக்கு ஐ.நா.செயலாளரின் கண்டனம் வசதியை வழங்கி விட்டது என்றும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் அமைச்சர் கதிர்காமரிடம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு உதவி வழங்கும் சர்வதேச நிதி நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவிகளை வழங்கும் போது நாட்டின் சுயாதிபத்தி யத்தை மீறும் வகையில் விதிக்கப்படும் நிபந்தனைகள் புலிகளுககு ராஜதந்திர ரீதியான அந்தஸ்தைப் பெற்றுத்தர மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு தமது எதிர்ப்பைத் தெரிவித்ததோடு, இதுபோன்ற நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த வேண்டுமென்றும் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இதறகுப் பதிலளித்த அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இது போன்ற செயற்பாடுகள் அனைத்தையும் தான் ஆராய்ந்து வருவதாகவும் எதிர்காலத்தில் ஆக்கபூரவமான நடவடிக்கைகள் மேறகொள்ளப்படுமென்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி.க்கும் அரசாங்கத்துக்குமிடையே தோன்றியுள்ள முரண்பாடுகள், கூட்டமைபபின் எதிர்காலம் தொடர்பாகவும் முரண்பாடுகளை தீர்க்க அமைக்கப்பட்டுள்ள குழுவின் செயற்பாடுகள் தொடர்பாகவும் இப்பேச்சுகளின் போது ஆராயப்பட்டதாகவும் தெரியவருகிறது. (ப)

## இராசி பலன்

**16.01.2005**
**(மாசி 4 புதன்கிழமை)**
**அட்டமி முன்னிரவு 10.50மணிவரை**
**கார்த்திகை பின்னிரவு 10.27 மணி வரை**
**இராகுகாலம் 12.35 -2.33 மணிவரை**
**சுபநேரம் 05.03 - 06.33 மணிவரை**
**கார்த்திகை விரதம்**

**மேடம்** உணர்ச்சி வசப்படுதல், எடுத்த காரியம் தாமதமாகும், பண விரயம், தொழில் நன்மை.

**இடபம்** ஆழ்ந்த சிந்தை, நல்ல முயற்சி, நண்பர்கள் உதவி, சயன சுகம்.

**மிதுனம்** மனக்கிலேசம், காரிய அலைச்சல், சுப சுபசெலவு, தொழில் விருத்தி.

**கடகம்** பெருமையடைதல், பொருள்சேர்க்கை, செய் தொழில் விருத்தி, போசன சுகம்.

**சிங்கம்** கடின உழைப்பு, நல்ல செய்தி, பிறர் உதவி, அதிகாரம்.

**கன்னி** ஆன்றோர் மதிப்பு, உடல் உழைப்பு, வீண் பயம், உடல் நலக்குறைவு.

**துலாம்** எதிர்பாராத அச்சம், போசன சுகம், உடல் வியாதி, காரிய தடங்கல்.

**விருச்சிகம்** திடீர் பயணம், நண்பர்கள் சந்திப்பு, நல்ல வரவேற்பு, தொழில் வருமானம்.

**தனுசு** பண வருவாய், திடீர் பயணம், சுக வாழ்வு, காரிய அனுகூலம்.

**மகரம்** காரியஇடையூறு, வியாபார நன்மை, மனக் கவலை, சிறு வியாதி.

**கும்பம்** கல்வியில் ஆர்வம், அற்பர் நேசம், பயந்த சுபாவம், முயற்சி தாமதம்.

**மீனம்** கூட்டு முயற்சி, அந்நியர் சந்திப்பு, வாக்கு மேன்மை, பண வருவாய்.

பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது - வளவன்

## அன்பளிப்பு

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் சுனாமி அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வைத்திய சேவையை வழங்கிவரும் போர்த்துக்கல் வைத்தியக்குழு மேற்படி வைத்தியசாலை சகல ஊழியர்களுக்கும் றபா படுக்கை விரிப்பு, பற்பசை, சீப்பு, சவர அலகு போன்ற பொருட்களை இலவசமாக வழங்கியுள்ளது. (ப-35)

## கோரிக்கை

(பொன்னாலை)

வலி-மேற்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பல்வேறு கிராம சேவையாளர் பிரிவுகளிலும் சட்டவிரோத மதுபான விற்பனைகள் நடைபெற்று வருவதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இச் சட்டவிரோத மது விற்பனை காரணமாக பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

சம்பந்தப்படடவர்கள் இம்மது விற்பனையைக கட்டுப்படுத்த முன்வரவேண்டுமென்றும் அம்மக்கள் மேலும் கேட்டுக் கொள்கின்றனர். (ப-49)

## மஹோற்சவம்

(மருதங்கேணி)

பருத்தித்துறை தம்பசிட்டி அருளமிகு பண்டாரி அம்மன் கோவில் வருடாந்த மஹோற்சவம் நேற்று செவ்வாய்க்கிழமை பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா இடம்பெறும். இதில் 23ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 24 ஆம திகதி சமுத்திர தீர்த்த உற்சவமும் இடம்பெற்று மஹோறசவம் முடிவு பெறும். (ப-35)


## அனுமதியின்றி மணல் அகழ்வு இருவருக்கு அபராதம் விதிப்பு


(துன்னாலை)

துன்னாலை வடக்கு செட்டிய காடு பகுதியில் மண் அகழ்வில் ஈடுபடட இருவ்ரையும் அவர்களது ஹன்ரர் வாகனத்தையும் கைப் பற்றிய நெல்லியடி பொலிஸார் பருத்தித்துறை மாவட்ட நீதி மன்றில் முற்படுத்திய வேளை நீதிபதி க.அரியநாயகம் குறித்த நபர்களை கடுமையாக எச்சரிக்கை செய்ததுடன் ரூபா 20 ஆயிரம் அபராதமும் வித்தார்.

அபராதம் செலுத்தத்தவறின் 6 மாதகால சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். அத்துடன் குறித்த சட்டவிரோத நடவடிகையில் பயன் படுத்திய ஹன்ரர் வாகனத்தில் ஏற்றப்பட்ட மண்ணை சனசமூக நிலையத்துக்கு வழங்க உத்தரவிட்டார். (க-101)







**யாழ். ரெலிக்கொம் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய கோபுரத்திற்கான நினைவுக்கல்லை ரெலிக்கொம் நிறுவன பிரதான நிறைவேற்று அதிகாரி சுகிஅனன் நேற்று முன்தினம் திரை நீக்கம் செய்து வைத்தார்.**

**மங்கள வாத்தியங்கள் சகிதம் அவர் அழைத்துச் செல்லப் படுவதையும் நினைவுக்கல் திரை நீக்கம் செய்து வைக்கப் படுவதனையும் படங்களில் காணலாம். (படங்கள்: ஞா.ஐங்கரன்)**

## இன்று ஒரு தகவல்

# நேர்மை

அபுஹனிபா என்று ஒரு பெரியவர் இருந்தார். இஸ்லாமியப் பெரியவர். அவர் ஒரு நெசவாளர். மிகவும் ஏழ்மையான நிலைமையில் இருந்தார். அவர் என்னசெய்வார் என்றால் தினமும் தானே கையால் நூல் நூற்றுத் துணிகளைத் தயார் செய்வார். அவற்றைத் தோளில் போட்டுக்கொண்டு தெருத்தெருவாகப் போய் விற்பனை செய்வார். அதனால் வரக்கூடிய சொற்ப வருமானத்தை வைத்துக் கொண்டு அவர் வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தார்.

அவர் ஒரு நாள் பாலைவனப் பகுதி வழியாகப் போய்க் கொண்டிருந்தார். அவருடன் இன்னும் இரண்டு நண்பர்களும் போய்க்கொண்டிருந்தார்கள். வழியில் ஒரு ஆள் பேரிச்சம் பழம் விற்றுக் கொண்டிருந்தான்.'விலைஎன்ன?' என்று விசாரித்தார் இவர். "காசுக்குப் பத்துப்பழம்" என்றான் அவன். அந்த ஊர்க்காசு 'சரி! ஒருகாசுக்குப் பழம்கொடு அப்படியே சருகில் வைத்துக் கட்டிக்கொடுத்து விடு வழியில் சாப்பிட்டுக் கொள்கிறோம்' என்றார் அவர். அதே மாதிரி அந்த ஆளும் ஒரு உலர்ந்த சருகில் பழத்தை வைத்துக் கட்டிக் கொடுத்தான்.

அதை வாங்கிக் கொண்டு இவரும் மற்ற இரண்டு பேரும் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்கள் போய்க் கொண்டிருப்பது பாலைவனப் பகுதி அல்லவா, அதனால் எங்கேயாவது தண்ணீர் கிடைக்கும் இடமாகப் பார்த்து உட்கார்ந்து பழத்தைச் சாப்பிடலாம் என்று நினைத்துக் கொண்டு சென்றார்கள். வழியில் ஒரு நீர் நிலை தெரிந்தது. அங்கே போய் 3 பேரும் உட்காந்தார்கள். பெரியவர் பொட்டலத்தைப் பிரித்தார். பத்துப் பழம் தானே இருக்கவேண்டும். பதினொரு பழம் இருந்தது. அதாவது ஒரு பழம் அதிகம்.

இதைப் பார்த்தவுடன் பெரியவர் பதறிப்போய் விட்டார். ஒரு காசக்கு பழம் என்றுதானே அவர் சொன்னார் கைதவறுதலாக அந்தப் பழவியாபாரி ஒரு பழம் கூட வைத்துவிட்டாரே! இது அவருக்கு நஷ்டமே! இப்போது என்ன செய்வது என்று யோசித்தார். 'சரி... திரும்பிப்போய் அந்தப் பழ வியாபாரியைச் சந்தித்து இந்த ஒரு பழத்தைக் கொடுத்துவிட்டு வருவோம்' என்று புறப்பட்டார்.

பக்கத்தில் இருந்த நண்பர்கள் சிரித்தனர். 'என்ன ஐயா இது? வேடிக்கையாக இருக்கிறது! ஒரே ஒரு பேரிச்சம் பழத்திற்காக, அதைத்திருப்பிக்கொடுப்பதற்காக திருப்பவும் மூன்று கல் தொலைவுக்கு திரும்ப நடக்கவேண்டுமா? இது தேவையா? என்றார்கள். பெரியவர் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. 'வியாபாரத்தில் நாம் காசு கொடுத்து அதற்கு சரியான ஒரு பொருளை வாங்குகிறோம் அதுதான் நியாயம். அதிகப்படியாக எதுவும் கொடுத்தால் அது விலக்கப்பட்ட பொருள் அது நம்மை சேரக்கூடாது. அபஹாரமானது' என்று கூறிவிட்டு நேராக அந்த வியாபாரியைத் தேடி போனார். அந்த ஒரு பழத்தைத் திருப்பிக் கொடுத்தார்.

ஆனால் அந்த ஆள் என்ன சொன்னான் தெரியுமா? "ஐயா! அந்த ஒரு பழத்தை நான்தெரியாமல் கொடுத்துவிட வில்லை! உங்கள் தோற்றத்தைப் பார்த்ததும் எனக்கு உங்கள் மீது ஒரு மரியாதை ஏற்பட்டது. அதனால்தான் ஒரு பழத்தை அதிகமாக வைத்துக் கட்டிக்கொடுத்தேன் பரவாயில்லை வைத்துக்கொள்ளுங்கள் " என்றான். ஆனால் இந்தப் பெரியவர் அதற்கு சம்மதிக்கவில்லை.

வணிகத்தில் வியாபாரத்தில், வாங்குபவர் ஒருவர், விற்பவர் ஒருவர் இரண்டுபேரும் இவ்வளவுக்கு இவ்வளவு என்று ஒரு உடன்பாட்டுக்கு வருகின்றனர். அதுதான் வியாபாரம். அந்த உடன்பாட்டுக்கு ஒத்துப்போவது தான் நியாயம். அந்த நியாயம் தவறி நாம் நடந்து கொள்ளக் கூடாது என்று கூறிவிட்டு பழத்தையும் திருப்பிக் கொடுத்துவிட்டு வந்து விட்டார். நேர்மை, நியாயம் இதற்கெல்லாம் இலக்கணம் அந்த இஸ்லாமியப் பெரியவர்.

இந்தக் காலத்திலெல்லாம் நாம் அப்படியா நடந்து கொள்கிறோம். நீங்களே கொஞ்சம் நன்றாக யோசித்துப் பாருங்கள். 'கொசுறு' இல்லாவிட்டால் இப்போது வியாபாரமே இல்லை. அது மட்டுமில்லை. வாங்குபவர் விற்பவரை எப்படி ஏமாற்றுவது என்று பார்க்கிறார். விற்பவர் வாங்குபவரை எப்படி ஏமாற்றுவது என்று பார்க்கிறார். சாமர்த்தியசாலிகள் பிழைத்துக்கொள்கிறார்.

ஒருத்தர் அப்படித்தான் மாம்பழம் வாங்கினார். 'ஒருபழம் ஒரு ரூபா' என்றார் கடைக்காரர். பத்து ரூபாய்க்கு பழம் கொடு என்றார் இவர். 10 பழம் கொடுத்தார். இவர் அடித்துப் பிடித்து பேசி ஒரு பழம் அதிகமாகவே வாங்கிக் கொண்டு வந்து விட்டார். வந்த பின்பு பாவம் அந்தக்கடைக்காரர் என்று மிகவும் வருத்தப்பட்டார்.

'நீங்கள் தானே அடித்துப்பிடித்துக் கட்டாயப்படுத்தி ஒரு பழம் அதிகமாக வாங்கினீர்கள். இப்போது நீங்களே வருத்தப்பட்டால் எப்படி? என்றார் மனைவி. 'நான் அதற்காக வருத்தப்பட வில்லை. நான் அவரிடம் கொடுத்தது செல்லாத பணம் பாவம் எப்படி அதை மாற்றுவாரோ என்று நினைத்து வருத்தப்படுகிறேன்' என்றார் இவர்.

இதேநேரத்தில் அந்தக் கடைக்காரரும் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார். 'புளிப்பான பழத்தை அவர் தலையில் கட்டி விட்டேனே! எப்படித்தான் சாப்பிடப்போகிறாரோ' என்று நினைத்து.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# உறவிழந்தசிறார்களைப் பாதுகாப்பதற்கான புனர்வாழ்வுத் திட்டங்கள் அரசிடம் இல்லை

## யாழ். பொதுஅமைப்புகள் ஒன்றியம் கொபி அனானுக்குக் கடிதம்

**சிங்கள அரசுகள் இனக் கொலை மூலம் தமிழ்மக்களை ஒழித்துக்கட்டுவதற்கு கடைப் பிடித்து வந்த கொடிய ஒடுக்கு முறைகளின் விளைவாக சுயநிர்ணய உரிமைகோரி தமிழ்மக்கள போராடி வருவது நீங்கள் அறிந்ததே. இந்த அரசியல் விடுதலையை அஹிம்சைப் போராட்டங்களின் ஊடாக பெற்றுக்கொள்வது சாத்தியமில்லை என்ற பட்டறிவின் காரணமாகவே குடும்பத்தைத் துறந்து, கல்வியைத் துறந்து, இளமையின் இன்பங்களைத் துறந்து சுதந்திரம் என்ற இலட்சியத்திற்காகத் தமது உயிரையும் துச்சமாக மதித்து போராட்டக்களத்தில் இளைஞர்கள் குதித்திருக்கிறார்கள் இவர்களை ஆயுதப்போராட்டப் பாதைக்கு தள்ளியது சிங்கள அரச பயங்கரவாதமே.**


இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம்கொபி அனானுக்கு யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட போர் அனர்த்தத்தில் கோரப் பலியான பெற்றோர்களை, உறவுகளை இழந்த பிள்ளைகள் வாழவழியின்றி தஞ்சங்கொடுக்க எவருமின்றி தம்மையும் தமது வாழ்வையும் பாதுகாப்பதற்காகவே தமிழீழவிடுதலைப்புலிகளுடன் இணைந்து கொள்கிறார்கள். அவர்களது வயது, வசதிகளுக்கும் விருப்பத்திற்கும் ஏற்ற முறையில் புனர்வாழ்வு அளிக்கப்படுகிறது. இது படைகளுக்குச் சேர்த்துக்கொள்வதற்கான முயற்சி என அர்த்தப்படாதல்லை.

உண்மையில் இயற்கையின் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் தாய் தந்தையரை இழந்த சிறார்களுக்கும் தமிழீழவிடுதலைப் புலிகள், தொண்டர் அமைப்புகளும் மிகுந்த காத்திரமான பணிகளை மேற்கொண்டுவரும் இந்த நல்ல சூழ் நிலையில் மக்கள் மயப்பட்டுள்ள உரிமைப்போராட்டத்தை, நல்லெண்ணத்தை சீர்குலைக்கவே சிறுவர்களை படைக்கு திரட்டுகிறார்கள். சிறுவர்களைப் போரில் ஈடுபடுத்துகின்றார்கள் என்ற விசமப் பிரசாரங்கள் குறிப்பாக அரசும் அரச அடிவருடிகளும் அரச ஊடகங்களும் திட்டமிட்டு மேற்கொண்டு வருகிறார்கள். உண்மையிலேயே தாமாக விருப்புடன் உணர்வுடன் வருகின்ற வயதில் குறைந்தவர்கள் சிறுவர் பாதுகாப்பு நிலையங்களில் அனுமதிக்கப்பட்டு அவர்களுக்கான புனர்வாழ்வு அளிக்கப்படுகிறது.

அத்துடன் அவர்களுக்கான புனர்வாழ்வு வேலைத் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டு வாழ்வில் நம்பிக்கை வளர்த்து முறையாகப் பெற்றோரிடம் கையளிக்கப்படுகிறார்கள். அண்மையில் 23 சிறுவர்கள் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்கள்.

சுனாமிப் பேரழிவின் பின்னர் எத்தனையோ சிறுவர்கள் வாழவழியின்றி, மனோ நிலை பாதிக்கப்பட்டு தனித்து விடப்பட்டிருக்கும் சூழ்நிலைகளிலும் அவர்களை அரவணைத்து அவர்களது எதிர்காலத்திற்கு நம்பிக்கையூட்டி, உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு கூட உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. போர் நிறுத்தம் தோற்றம் பெற்றுள்ள இந்த நிலையில் போருக்கு சிறுவர்களை இணைக்கின்ற தேவைகள் இல்லாத போதும் சீரான கல்வி கற்க முடியாத வசதி அற்ற குடும்ப சூழ்நிலையும் உண்டு. உணவு தேடும் நிலைமை, தொழிலின்மை, எதிர்கால சிந்தனை இவற்றுக்கு அரசிடம் ஆக்கபூர்வமான திட்டம் கிடையாது. இதன் பிரதி பலிப்பாகவே நூற்றுக்கணக்கான சிறுவர்கள் பெற்றோர், உறவினர்களை இழந்து தனித்து விடப்பட்டுள்ளனர்.



இவர்களுக்கு எதிர்காலமும் உண்டு என்ற சிந்தனையில் தமிழ் மக்களது அவசர தேவைகளை புறந் தள்ளி செயற்படும் அரச நிறுவனங்கள் திறனற்றவையாகவேயுள்ளன.

அத்துடன் பேரினவாத சகதியுள் மூழ்கிக் கிடக்கின்றன. அச்சிறுவர்களது நல்வாழ்வுக்கான செயற்பாடுகளை முன்னெடுக்கும் பாரிய பொறுப்பினை தமிழீழ விடுதலைப் புலிகள் விருப்புடன் ஏற்றுள்ளனர். இப்பொறுப்பினை செவ்வனே நிறைவேற்றுகின்றன என்பதை மக்கள் புரிந்து கொண்டுள்ளனர் என்பது மறுக்கவெண்ணாத உண்மையாகும். மனித நேயம் முதன் நிலைப்படுத்தப்படவேண்டும். சாசனங்களது குறுகிய வடிவம் மனித நேயத்தை தீர்மானிக்க முடியாது.

வடகிழக்கு மனித உரிமை செயலகப் பணிப்பாளா வண.பிதா எம்.எப்.எக்ஸ். கருணைரத்தினம் அவர்களிடம் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளா தியாகராசாவினால் 3.2.2005 அன்று 23 சிறுவர்கள ஒப்படைக்கப்பட்டு முறையாக பெற்றோரிடம் கையளிக்கப்பட்டார்கள்.

எனவே குறுகிய நோக்குடனான அறிக்கைகளை வெளியிடுவதைத் தவிர்த்து மெய்ஞான கள நிலைமையினை சீர்துக்கி மதிப்பிட்டு நிரந்தர சமாதானத்திற்கான நம்பிக்கையை உருவாக்குவதற்கான கட்டுமானங்களை முதலில் கட்டியெழுப்புவதனூடாகவே சிறுவர்களது முழுமையான நலன் பேணும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் இதுவே சர்வதேச சமூகத்தின் கடப்பாடாகும்.

இன்றைய சிறுவர்களே நாளைய உலகத்தின் சிற்பிகளாவர் என்ற தெளிவுடன் சிறுவர்களது உரிமைகளைப் பேணுவோம் என உறுதியெடுத்து அவர்களுக்கான மகிழ்ச்சிகரமான போரற்ற சூழ்நிலையை உருவாக்குதலே எம் அனைவரது இலக்காக விளங்கடடும்.சிறுவர்கள் நலன் பேண நாம் அனைவரும் ஒன்றிணைந்து உழைப்போம் வாரீர் என அனைவரையும் அழைக்கின்றோம் என அக்கடிதத்தில மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ப)

# ஜனாதிபதியின் வருகையில் காலதாமதம் சந்திப்பை இரத்துச் செய்தது ஹெல உறுமய

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் வருகையயில் ஏற்பட்ட தாமதம் காரணமாக நேற்று முன்தினம் நடைபெறவிருந்த சந்திப்பு நடைபெறவில்லை என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

ஜனாதிபதிக்கும் ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையில் நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி மாளிகையில் இச்சந்திப்பு நடைபெறுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது.

ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் அங்கு சென்ற ஜாதிகஹெல உறுமய உறுப்பினர்களை சந்திப்பதற்கு ஜனாதிபதி செல்லத் தாமதமானதால் மேற்படி சந்திப்பினை இரத்துச் செய்துவிட்டு ஹெல உறுமயவின் பௌத்த குருமார்கள் ஜனாதிபதி மாளிகையில் இருந்து வெளியேறினா். இது குறித்து பாராளுமன்ற உறுப்பினர் ஒமல்போ சோபித தேரர் கருத்துத் தெரிவிக்கையில், ஜனாதிபதியால் நேரத்துக்கு வேலை செய்யமுடியாது என்பது சாதாரணமாக அனைவரும் அறிந்த ஒரு விடயம் தான். அதனை அவராலும் மாற்றிக்கொள்ள முடியவில்லை.

ஜனாதிபதியின் அழைப்பினை ஏற்றே நாம் அங்கு சென்றோம் அவ்வழைப்புக்கு நன்றி கூறுகின்றோம். எனினும அவரது அழைப்பை ஏற்று அங்கு சென்ற நாம் அவரைச் சந்திக்க முடியாதது மிகவும் வேதனை அளிககின்றது. எமக்கு நேரத்தை வீணடிக்க முடியாததால் அச் சந்தப்பினை இரத்துச் செய்து விட்டு வந்து விட்டோம் எனக் குறிப்பிட்டார். (ந-4)

## கொரியக் கடற்படைத் தளபதியை பிரதமர் மகிந்த சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

கொரிய கடற்படைத்தளபதி தலைமையிலான குழுவினரை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன் தினம் சந்தித்துப்பேச்சு நடாத்தினார்.

இந்தச் சந்திப்பு பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்றது. சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நாட்டை மீண்டும் கட்டியெழுப்பத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்துள்ளதாக கொரியா கடற்படைத் தளபதியிடம் பிரதமர் தெரிவித்தார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பெரும்பாலான மாவடடங்களை மீளக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுவருதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார். சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு கொரியா அரசாங்கம் உதவிகளை வழங்கியதற்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமது நன்றிகளையும் தெரிவித்தார். (ந-9)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தமிழீழ மாணவ அமைப்பு முன்பள்ளி முதல் ஆண்டு 5 வரையுமான மாணவர்களிற்கு ஆங்கிலத்தில் பேச்சு, எழுத்து, வாசிப்பு பயிற்சிகளை வழங்கத் தீர்மானித்துள்ளது. இதற்காக அவுஸ்திரேலியாவில் இருந்து விசேடமாக ஆங்கில ஆசிரியர் சமுகம தந்துள்ளார்.


எனவே மேற்குறிப்பிட்ட கல்வித் தரம் கொண்ட மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கல்வி கற்க விரும்பும் மாணவர்கள், தமிழ மாணவர் ஒன்றியம், இலக்கம்.155 கோயில் வீதி யாழ்பபாணம் எனும் முகவரியுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவத்தைப் பெற்று அவ் விண்ணப்பப் படிவத்தினை 17 ஆம் திகதிக்கு முன்னா நிரப்பி ஒப்படைக்க வேண்டும். அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் கற்பித்தல்களும் பாடக்குறிப்புகளும் முற்றிலும இலவசமானது என்பது குறிப்பிடத்தக்கது.(ப)

# மஞ்சள் மகத்துவம்

உணவு வகைகளில் மஞ்சள் முக்கிய இடம் பெற்றுள்ளது. மஞ்சள் வாசனைப் பொருளாக மட்டுமல்லாமல் மருந்துப் பொருளாகவும் பயன்படுகிறது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன் மஞ்சள் சர்வதேச அளவில் பத்திரிகை செய்திகளில் இடம்பெற்றது.

பல்வேறு சிறப்பு மருத்துவ குணங்களைக் கொண்ட மஞ்சள் காயங்களை ஆற்றும் தன்மைகொண்டது.

பல நூற்றாண்டு காலமாக நடனக்கலைஞர்களால் அழகு சாதனப் பொருட்களாகப் பயன்படுத்தப்பட்டு வந்த மஞ்சள் சாதாரண இருமல், சளி போன்ற நோய்களுக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. காயங்கள் மற்றும் புண்களை ஆற்றுவதற்கு மஞ்சள பயன்படுத்தப்பட்டு வந்தது. இன்றும் திருமணங்களில் பெண்களை அழகுபடுத்த மஞ்சள் பயன்படுத்தப்படுகிறது. சந்தையில் விற்கப்படும் அழகுசாதனப பொருட்களில் மஞ்சள் முக்கிய பொருளாக உள்ளது.



உலகளவில் 80 சதவீதம் மஞ்சள் இந்தியாவில்தான் விளைகிறது. இந்தியாவில் விளையும் வாசனை மற்றும் சுவையூட்டும் பொருட்களின் விளைச்சலில மஞ்சள் 60 சதவீத இடத்தைப் பிடிக்கிறது. இலங்கையிலும் மஞ்சள் பரவலாகப் பயிரிடப்படுகிறது. வங்கதேசம், பாகிஸ்தான், தாய்லாந்து, சீனா, தாய்வான், பெரு, மைக்கா ஆகிய நாடுகளிலும் மஞ்சள் விளைகிறது.

வாசனை, நிறம் மற்றும் கூடுதல் சுவை ஆகியவற்றை அளிப்பதோடு மட்டுமல்லாமல் கான்ஸ்சர், அஜீரணம், இதய நோய், இழுப்பு, ஆஸ்துமா மற்றும் நரம்பியல் நோய்களுக்கு மருந்தாகவும் மஞ்சள் பயன்படுகிறது. பயிர்ப் பாதுகாப்புக்குத் தேவையான வேதியியல் பொருட்கள் மஞ்சளில் அதிகம் உள்ளன. இவை விற்றமின்களுக்கு இணையானது. மனித செயற்பாட்டுக்கும் அத்தியாவசியமானதாகவும் கருதப்படுகிறது.

# அன்னாசியும் ஆஸ்த்துமாவும்



அன்னாசிப்பழங்கள் வெறும் ருசிக்காக மட்டுமே உண்ணப்படுவதல்ல. அதற்கு மருத்துவகுணமும் உண்டு என்றும், ஆஸ்த்துமாவைக் குறைப்பதில் அன்னாசி முக்கிய பங்கு வகிக்கிறது என்றும் ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. கனெக்டிகட் பல்கலை பேராசிரியர் எரிக் ஆர்.செகோர், அன்னாசிச்செடியின் தண்டிலிருந்து எடுக்கப்படும் ப்ரோமிலெய்ன் (**Bromelain**) ஆஸ்துமா தொடர்பான அழற்சிகளை குறைப்பதாகக் கூறுகிறார். ப்ரோமிலெய்ன் கொண்டு சில எலிகளில் செகோர் பரிசோதனை நடத்தினார். ஆஸ்துமாவினால் அதிகரிக்கும் வெள்ளையணு உற்பத்தியைப் ப்ரோமிலெய்ன் குறிப்பிடத்தகுந்த வகையில் குறைப்பதைக் கண்டார். இதனால் அழற்சி ஆஸ்துமாவை உண்டாக்கும். செல்வளர்ச்சியை இது குறைக்கிறது என்கிறார் செகோர். புரோமிலெய்ன் எவ்வாறு வேலைசெய்கிறது என்பது சரிவரத் தெரியாவிட்டாலும் நுரையீரல் சார்ந்த நோய்களை இதன்மூலம் தீர்க்கமுடியும் என்று அவரது ஆய்வு தெரிவித்துள்ளது.

# ஐயங்கள் ஆயிரம்

# உடலில் அழுக்கு

உடலில் சுரக்கும் வியர்வையும், காற்றிலுள்ள தூசியும் சேர்ந்து அழுக்கு உண்டாகிறது. வியர்வை என்பது வெறும் உப்புநீர் அல்ல. அதில் பல அமினோ அமிலங்களும், கொழுப்புப் பொருளும் உள்ளன.

இதைப் பயன்படுத்தி வசிப்பதற்காக நிறைய பக்றீரியாக் கிருமிகளும் சேர்ந்துகொள்கின்றன. நமது தோல் மீது பக்றீரியா

## எவ்வாறு தோன்றுகிறது?

வளரும்போது அவற்றின் செல்களிலிருந்து வெளிப்படும் கழிவும் சேர்ந்து நமது தோல் மீது பசை போன்ற படலம் படிகிறது.

தூசி மிகுந்த நகர வீதிகளில் பயணம் செய்யும்போதும், வசிக்கும் போதும் அழுக்கு அதிகம் சேருகிறது.

காற்றில் கலந்துள்ள கழிவுகள், புகை, தூசி ஆகியவை உடலின் மீதுள்ள கொழுப்புப்படலத்தில் படிந்து அழுக்காக மாறிவிடுகிறது.

# மூளையும் பதிவும்

காலையிலிருந்து இரவு உறங்கச்செல்லும் வரை நடந்த நிகழ்ச்சிகளை மறுநாள் துல்லியமாக நினைத்துப் பார்க்க முடிவதில்லையே ஏன்?

நமது நினைவகம், வழக்கத்துக்கு மாறாக நடந்த நிகழச்சிகளைத்தான் அதிக கவனமாகப் பதிந்து வைத்துக் கொள்கிறது. பல்துலக்குவது, ரீ குடிப்பது, செருப்புப்போடுவது, பட்டின்போட்டது ஆகிய உப்புச்சப்பில்லாத நிகழ்ச்சிகளை உதாசீனம் செய்துவிடுகிறது.

மாறாக டூத்பேஸ்டுக்குப் பதிலாக, ஷேவிங் கிரீமைத் தெரியாமல் பிரெஷ்ஷில் போட்டுக்கொண்ட நிகழச்சியை மறக்காது. எந்த நிகழ்ச்சிகளெல்லாம் பிற்கால வாழ்க்கைக்கு அவசியமோ அவை நினைவாகப் பதிகின்றன. மற்றவை தற்காலிகமாக நினைவில் இருந்து அழிக்கப்படுகின்றன.

# எண்களால்

## உடல் எண் 6 உயிர் எண் 5

6,15,24 போன்ற திகதியில் பிறந்து திகதி, மாதம், வருடம் ஆகிய இம்மூன்றையும் கூட்டிவருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர்எண் 5 வருமேயானால் இவர்கள் சுக்கிரன், புதன் போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவர்.

இவர்கள் பார்ப்பதற்குச் சுமாரான உயரமானவர்களாகவும், சுறுசுறுப்பாகவும் காட்சியளிப்பர். எக்காரியத்தில் ஈடுபட்டாலும் உடனே முடிக்கவேண்டும் என்று துரிதமாக இயங்கும் இயல்புடையவர். ஓரளவு பெருத்த சரீரமும், அழகான தோற்றமும் கொண்ட இவர்கள் மற்றவர்களைத் தன்வயப்படுத்துவதில் கைதேர்ந்தவர்கள். எளிதில் புரிந்துகொள்ள முடியாத புதிராக விளங்குவர். சிலநேரங்களில் குழந்தைபோன்றும், சில நேரங்களில் முரடராகவும் இருப்பர்.

பிறருக்கு உதவும் மனப்பான்மைகொண்ட இவர்களை மற்றவர்கள் ஏமாற்ற நினைத்தால் சந்தர்ப்பம் பார்த்துப் பழிவாங்கிவிடுவர். இதனால் இவர்களைக் கண்டு மற்றவர்கள் அஞ்சுவர். பெயர் தனது பிறந்த திகதிக்குப் பொருத்தமானதாக அமைந்துவிட்டால் பல்வேறு வழிகளில் பெரும் பணம் சம்பாதித்துவிடுவர். ஆனால் பிறந்த திகதிக்குப் பொருத்தமானதாகப் பெயர் அமையாவிட்டால், இவர்களுடைய எண்ணங்கள், பிறரை ஏமாற்றுவதிலும், வஞ்சிப்பதிலும், சூது, மாது போன்றவற்றிலும் நாடிச்செல்லும். இதனால் பிறந்த திகதிக்குப் பொருத்தமான எண்களில் பெயர் அமையவேண்டியது அவசியம்.

பிறருக்கு உதவுவதன் மூலமும், தொழில்களை அமைப்பதன் மூலமும், சமுதாயத்தில் தன் அந்தஸ்தை உயர்த்திக்கொள்ளுவர். இவர்களைச் சுற்றிலும் எப்பொழுதும் நண்பர்கள் கூட்டம் இருந்துகொண்டே இருக்கும். இவரிடம் யோசனை கேட்பதற்குப் பலர் காத்துக்கொண்டேயிருப்பர். இவர்களை ஏமாற்றுவதென்பது அவ்வளவு சுலபமில்லை. ஆனால் மற்றவர்கள் இவர்களது வலையில் எளிதில் மாட்டிக்கொள்வர். ஆடம்பரச் செலவும், ஊர்சுற்றும் செலவும் அதிகமாக இருக்கின்றதே என்று வருந்துவர்.

தன் கையில் பணம் இல்லாதபோது தனிமையில் மனம் வருந்துவர். இருக்கின்றபோது குதூகலமாகச் செலவு செய்து, இல்லாதபோது வருந்தும் இவர்களுக்குப் பெயர் பொருத்தமான எண்களில் அமைந்துவிட்டால், நீர் ஊற்றுப்போல் காசு பெருகும். நாட்டியம், இசை, சட்டம், தத்துவம், தொழில் போன்றவற்றில் ஆர்வம் மிகுந்தவர்கள்.

கலைஞானம்கொண்ட இவர்களை மற்றவர்கள் மதிப்பதோடு, இவர்களைத் தலைமை ஏற்கும்படியும் கூறுவர். இவர்களுடைய பிறந்த திகதிக்குப் பொருத்தமான பெயர் அமைந்துவிட்டால் நாளுக்குநாள் செல்வம் வளர்ச்சியடைந்து முன்னேற்றத்தின் உச்சஸ்தானத்தை அடைவர். ஆனால் பெயர் பொருத்தமின்றி அமையுமேயானால் எல்லா வாய்ப்புக்கள் இருந்தும் நழுவ விட்டுவிட்டு மனம் வருந்துவர்.

பொதுவாக இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்களுக்குப் பெயர் பொருத்தமானதாக அமைந்துவிட்டால் வீடு, வாகனம், நிலம் போன்றவைகளோடு நல்ல ஆரோக்கியம், நல்ல வாழ்க்கைத்துணை, நல்ல குழந்தைகள், நல்ல செல்வம் ஆகியவைகளைப் பெற்று சிறந்து வாழ்வர்.

இந்த ஆதிக்கத்தில் பிறந்த சிலர் உத்தியோகத்தில் இருந்தாலும் தொழில்செய்ய முற்படுகின்றனர். இந்த எண்ணிக்கைக்காரர்களுக்குத் தெய்வ நம்பிக்கை அதிகம் இருக்கும்.

எந்த ஒரு காரியத்தை ஆரம்பித்தாலும் தன் கடின உழைப்பாலும், ஆண்டவன் அனுக்கிரகத்தாலும் வெற்றி பெறுவோம் என்ற தன்னம்பிக்கையுடன் இயங்குவர். பெயர் பொருத்தமாக அமையப்பெற்றால் ஒரு பெரும் பாக்கியசாலி என்றே கூறலாம். ஆனால் பெயர் பொருத்தமாக அமையாவிட்டால் இவர்களது உழைப்பெல்லாம் பிறருக்குச் சென்றுவிடும். அல்லது கெட்டவன் என்று

## ஏற்றமிகு வாழ்வு

பெயர் எடுக்கும் சூழ்நிலை உருவாகிவிடும். இதனால் பெயரைத் தனது பிறந்த திகதிக்குப் பொருத்தமானதாக மாற்றியமைத்துக்கொள்வது சிறப்பாகும்.

**Dr.ஆர். துரைமுருகர்**

**தொழில் :-** அழகுசாதனப் பொருட்கள், கமிசன், காண்ட்ராக்ட், ஏஜென்சீஸ், இரும்பு சம்பந்தமான தொழில், வாகனம் போன்றவற்றால் வாழ்க்கையில் உயர்வடைவர்.

**நோய் :-** இவர்களுக்கு இரத்தழுத்தம், வாதக்கடுப்பு, நீர் சம்பந்தமான நோய்கள், கண்நோய், நரப்புக்கோளாறு போன்றவைகள் வந்து நீங்கலாம். உப்பு, சர்க்கரையைக் குறைத்துக்கொள்வது நலம்.

**பெயர் அமைக்கும் முறை:-** இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு சுக்கிரன், புதன் போன்ற ஆதிக்கமான 15,24,33,42,60,69,14,23,32,41,50,59 போன்ற எண்களில் பெயர் அமைத்துக்கொள்ளலாம்.


**பின்பற்ற வேண்டியவை:-**

| | |
|---|---|
| யோகமான எண் | -6,5,1 |
| யோகமான திகதிகள் | -6,15,24,1,10,19,28,5,14,23 |
| யோகமான மோதிரக்கல் | -மரகதம் |
| யோகமான நிறம் | -பச்சை, நீலம், சாம்பல் நிறம் |
| ஆகாத நிறம் | -ரோஸ், ஆரஞ்சு, கத்தரிப்பூ நிறம், |
| ஆகாத திகதிகள் | -3,12,21,30 |

(தொடரும்)

# லெபனானில் பயங்கர குண்டுவெடிப்பு

# முன்னாள் பிரதமர் உட்பட பதின்மர் பலி



லெபனானின் பெய்ரூட்டில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற பயங்கர குண்டுவெடிப்பில் முன்னாள் பிரதமர் ரபீக் ஹரிரி கொல்லப்பட்டார். அவரது வாகனமும் வேறு சில வாகனங்களும் வந்துகொண்டிருந்தபோது, ஒரு ஹோட்டல் முன்பாக குண்டு வெடித்தது.

இதில் ரபீக் உட்பட 10 பேர் கொல்லப்பட்டனர். 100 பேர் காயமடைந்தனர். ரபீக்கின் பாதுகாவலர்களில் சிலர் இறந்தனர். பலர் படுகாயமடைந்தனர். இரு முன்னாள் அமைச்சர்களின் நிலைகுறித்து முரண்பட்ட தகவல்கள் வெளியாகியுள்ளன.

குண்டு வெடித்ததால் அருகிலிருந்த 20 கார்கள் தீப்பிடித்து எரிந்தன. பிரிட்டிஷ் வங்கி ஒன்றும் ஒரு ஹோட்டலும் கடுமையாகச் சேதமடைந்தன.

இக்குண்டுவெடிப்புக்கான காரணம் உடனடியாகத் தெரியவில்லை. லெபனானில் 1975இலிருந்து 1990ஆம் ஆண்டு வரை யுத்தம் நடைபெற்றது. அதைத்தொடர்ந்து அந்நாட்டின் பிரதமரான ரபீக் மிகப்பெரிய கோடீஸ்வரரானார்.

கடந்த 15ஆண்டுகளில் மொத்தம் 10 ஆண்டுகள் பிரதமராக இருந்திருக்கிறார். கடந்த அக்டோபரில் பதவியை இராஜினாமாச் செய்தார். அதிலிருந்தே அரசுக்கும் எதிர்தரப்புக்குமிடையே மோதல் நிலவி வந்தது.

இதையடுத்து அங்கு பதற்றம் நிலவிவந்தது. லெபனானில் சிரியாவின் தலையீட்டைக் கடுமையாக எதிர்த்து வந்தார் ரபீக். ஆனால் அதிபர் எமிலி லஹௌத் சிரியாவுக்கு ஆதரவாகச் செயல்பட்டதால் அவருக்கும் ரபீக்குக்கும் தொடர்ந்து மோதல் நடைபெற்றுவந்தது.

சிரியாவின் தலையீட்டை அமெரிக்காவும் எதிர்த்து வந்தது. இந்நிலையில் இப்படுகொலைச் சம்பவம் நடைபெற்றுள்ளது. இதை மிகக் கொடூரமான சம்பவம் என கண்டித்துள்ளார் சிரிய அதிபர் பஷீர் ஆசாத். (து)



**அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்சில் நேற்றுமுன்தினம் சிறந்த பாடகர்கள், அல்பங்களுக்கு கிராமி விருதுகள் வழங்கப்பட்டது. 8 விருதுகளைப் பெற்ற தயாரிப்பாளர்கள் பல ராமோன், ஜான்பர்க், 4 விருதுகளைப் பெற்ற பாடகி அலிகா கீஸ் ஆகியோரை படத்தில் காணலாம்.**

# சுனாமியால் மாயமான 3 விஞ்ஞானிகள்

# தேடும் பணியில் மீட்புப் படை

(கேம்பெல்)

அந்தமான் நிகோபாரில் சுனாமியின் போது காணாமல்போன சுற்றுச்சூழல் விஞ்ஞானிகள் மூன்று பேரை மீட்புப்படையினர் தொடர்ந்து தேடி வருகின்றனர்.

சுனாமி தாக்குதலில் அந்தமான் நிகோபார் தீவுகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. பலர் காணாமல் போய்விட்டனர். அவர்களில் சுற்றுச்சூழல் விஞ்ஞானிகள் மூன்று பேர் அடங்குவர். அவர்களைத் தேட சிறப்பு மீட்புப்படையினர் அனுப்பப்பட்டனர். எனினும், விஞ்ஞானிகளைப் பற்றி இதுவரை எந்த தகவலும் கிடைக்கவில்லை.

இதற்கிடையில், ஜெஸ்சி என்ற 18 வயது இளம்பெண் சமீபத்தில் மீட்கப்பட்டார். நிகோபாரைச் சேர்ந்த ஜெஸ்சி, பலோபாஞ்சால் என்ற இடத்தில் சிக்கிக்கொண்டார்.

சுனாமியால் அடித்துச்செல்லப்பட்டு ஆள் நடமாட்டம் இல்லாத இடத்தில் சிக்கிய ஜெஸ்சி, 36 நாட்களாக காட்டில் உள்ள பலாப்பழங்களையும், தண்ணீரையும் சாப்பிட்டு உயிர் வாழ்ந்துள்ளார்.

ஜெஸ்சி மீட்கப்பட்ட சம்பவம் மீட்புப் படையினருக்குப் புது நம்பிக்கையை ஏற்படுத்தி உள்ளது. விஞ்ஞானிகள் மூவரும் எங்களவது ஓரிடத்தில் உயிருடன் இருப்பார்கள் என்ற நம்பிக்கையில் தற்போது தேடுதல் வேட்டையை முடுக்கிவிட்டுள்ளனர்.

புவனேஸ்வரைச் சேர்ந்த விஞ்ஞானிகள் மூன்று பேர், அந்தமான் நிகோபார் தீவுகளில், ஆமைகளின் இனப்பெருக்கம் குறித்து ஆராய்ச்சி செய்து வந்தனர். சுனாமிக்குப் பின் அவர்கள் என்ன ஆனார்கள் என்பது தெரியவில்லை.

இது குறித்து மீட்புப்படைக் குழு அதிகாரி காணாமல்போன விஞ்ஞானிகள் மூன்று பேரில், ஒருவருக்கு அந்தமான் நிகோபார் தீவுகளின் நில அமைப்பு பற்றி எல்லா விபரங்களும் நன்கு தெரியும். அதனால் அவர்கள் வழிதெரியாமல் போய் இருப்பதற்கு வாய்ப்பில்லை. அவர்கள் எங்காவது ஓரிடத்தில் இருக்கவேண்டும். தொடர்ந்து தேடுதல் வேட்டை நடததி வருகிறோம் என்று கூறியுள்ளனர். (து)


உலக தரிசனம்

## மசூதியில் தீ 35 பேர் மரணம்

ஈரான் தலைநகர் தெஹ்ரானில கடந்த திங்கட்கிழமை மாலை நடந்த தொழுகையின்போது மசூதியில் நேரிட்ட தீ விபத்தில் 35 பேர் இறந்தனர். 200 பேர் காயம் அடைந்தனர்.

ஆடவர், மகளிர் தொழுகைக்கு அமரும் இடத்தைப் பிரிக்கவும், மகளிரை மறைக்கவும் போடப்பட்டிருந்த துணித்திரையில் மின்சாரக் கசிவு காரணமாக தீப்பிடித்தது.

அது வேகமாகப் பரவியது. மசூதியில் கூட்டம் அதிகம் இருந்ததால் மக்கள் வெளியேறுவதற்குள் தீ மளமளவென்று பரவியது. இறந்தவர்களில் 20 பேர் ஆண்கள். 15 பேர் பெண்கள். (து)



**காதலர் தினத்தையொட்டி தென்கொரியாவின் சியோல் நகரில் கமரா வடிவத்தில் தயாரிக்கப்பட்ட மிகப்பெரிய சொக்லெட்டை படம் பிடிக்கிறார் இளம் பெண். இந்தச் சொக்லெட் கமராவின் நீளம் 1மீற்றர். ஒலிம்பஸ் டிஜிற்றல் கமரா நிறுவனம் இதை வடிவமைத்தது.**



**ஏரோ இந்தியா - 2005 என்ற சர்வதேச விமானக் கண்காட்சி பெங்களூரில் நடைபெற்றுவருகிறது. இதில் இந்தியாவில் மட்டுமல்லாது பல்வேறு நாடுகளைச் சேர்ந்த விமானப்படைகளும் பங்கேற்று பல சாகசங்களை செய்து வருகின்றன. காதலர் தினத்தன்று சூர்யகிரண் விமானம் வண்ணப்பொடிகளை இதய வடிவத்தில் தூவி பார்வையாளர்களைக் கவர்ந்த காட்சி.**

# டாக்காவில் பொது வேலை நிறுத்தம்


# பொலிஸ் கெடுபிடி; 600 பேர் கைது

வங்கதேசத்தில் முக்கிய எதிர்கட்சியான அவாமி லீக் கட்சி சார்பில் சமீபத்தில் நடந்த பேரணியில் கலந்துகொண்டவர்கள் மீது பொலிஸார் கடும் தாக்குதல் நடத்தினர். குண்டுவீச்சு சம்பவமும் நடந்தது.

பேரணியில் நடந்த வனமுறை காரணமாக எதிர்க்கட்சிகள் அந்நாட்டு அரசாங்கத்தை எதிர்த்து பல கட்டமாக போராட்டம் செய்துவருகின்றன. அவாமி லீக் உள்ளிட்ட பல்வேறு எதிர்க்கட்சிகள் சார்பில் இரண்டுநாள் பொது வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

அந்த பொது வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று முன்தினம் காலை துவங்கியது. போராட்டத்தைச் சமாளிக்கும் விதமாக தலைநகர் டாக்காவில் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 600 பேர் பொலிஸாரால் கைது செய்யப்படடனர்.

எதிர்க்கட்சியினரின் வேலை நிறுத்தத்தின் போது பெரிய அளவில் அசம்பாவிதங்கள் ஏதும் நடக்கவில்லை. டாக்கா நகரம் முழுவதும் 11 ஆயிரம் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர். சாலைகளில் மக்கள் நடமாட்டம் அதிகமாக இல்லை. பள்ளிகள், கடைகள் மற்றும் தனியார் அலுவலகங்களில் குறைந்த அளவிலேயே வருகை இருந்தது. (து)



**நேபாளத்தில் ஆட்சியைக் கைப்பற்றிய பின் நடந்த முதல் அரசு நிகழ்ச்சியான வசந்தகால வரவேற்பு நிகழ்ச்சியில் பங்கேற்க வந்த நேபாள மன்னர் ஞானேந்திரா.**

# கடும் பாதுகாப்பு மத்தியில் பீகார், ஜார்க்கண்ட் தேர்தல்

பீகார் மற்றும் ஜார்க்கண்டில் நேற்றுமுன்தினம் இரண்டாம்கட்ட ஓட்டுப்பதிவு துவங்கியது. பீகாரில் சில ஓட்டுச்சாவடிகளில் ஓட்டுப்பதிவு துவங்கும் முன் குண்டுகள் வெடித்தன. ஆனால் இதனால் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை. வன்முறையில் ஈடுபடுபவர்களைக் கண்டதும் சுட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. நேபாள - பீகார் எல்லைக்கும் சீல் வைக்கப்பட்டது.

பீகார், ஜார்க்கண்டில் மூன்று கட்டமாகச் சட்டசபைத் தேர்தல் நடக்கிறது. முதல்கட்டத் தேர்தல் கடந்த 3ஆம் திகதி முடிந்தது. இரண்டாவது கட்டத் தேர்தலில் பீகாரில் 82 தொகுதிகளிலும், ஜார்க்கண்டில் 29 தொகுதிகளுக்கும் ஓட்டுப்பதிவு நடந்தது.

இத்தேர்தல் நக்சலைட்டுக்களின் ஆதிக்கம் நிறைந்த பகுதிகளில் நடப்பதால் கடும் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

ஓட்டுச்சாவடியைக் கைப்பற்றுபவர்கள் வன்முறையில் ஈடுபடுவோரைக் கண்டதும் சுடக் கடும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (து)

# வடக்குக் கிழக்கிற்கான புனர்வாழ்வு உதவிகளை சர்வதேசம் நேரடியாகவே வழங்கவேண்டும்

## யாழ்.மாவட்ட மகளிர் அமைப்புகள் ஒன்றியம் மகஜர்

*** நிரந்தர சமாதானத்திற்கான நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் ஆரம்ப நடவடிக்கையாகப் போர் நெருக்குவாரத்திலிருந்து விடுபட்ட இயல்புவாழ்வுநிலை தோற்றுவிக்கப்படவேண்டும். இயல்புவாழ்க்கை என்பது சமூகத்தைப் பொறுத்தவரையில், பெண்கள், படைத்தரப்பு அச்சுறுத்தல் மற்றும் வன்முறைகளிலிருந்து விடுபட்ட அபிவிருத்தியுடன் பிணைக்கப்பட்டுள்ளது.**

*** பேரினவாதக் கலாசாரத்தை அரசு கைவிடுமா என்பது கேள்விக்குரியது என்ற யதார்த்தத்தை சர்வதேச சமூகம் புரிந்துகொண்டு புனர்வாழ்வு அபிவிருத்தித் திட்டங்களை நேரடியாக வடக்குக் கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ள முன்வரவேண்டும்.**

*** தமிழீழ விடுதலைப்புலிகள் மீதும், தமிழ் மக்களின் உரிமைக்காகக் குரல்கொடுக்கும் ஆர்வலர்கள் மீதும் மேற்கொள்ளப்படும் தாக்குதல்களும் அச்சுறுத்தல்களும் உடன் நறுத்தப்படவேண்டும்.**

இவ்வாறான கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை யாழ்.மாவட்ட மகளிர் அமைப்புக்கள் ஒன்றியம் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் கையளித்துளளனர். அம்மகஜரின விபரம்வருமாறு,

தமிழரின் உரிமைப் போராட்டத்தை அடக்குவதற்கும் இன அழிப்பை மேற்கொளளவும் தந்திரோபாய நடவடிக்கையாக அரசு சமூக தளமாகிய பெண்களையே சிதைக்க முற்பட்டது. தமிழ்ப் பெணகளது உடல், உள இருப்பைச் சிதைத்து ஆற்றலை முடககுவதோடு அவா களது வாழ்வையும் அரசாங்கத்தின் செயறபாடு கேளவிக்குள்ளாககியுளளது. அத்தோடு எதிர்காலம் பற்றிய அச்சத்துடன் தமிழ்ப பெணகள் ஆற்றல் இழந்தவர்களாக நடமாடும் பிணங்களாக உருவாக்கவும், பேரினவாதம் முயன்றது. இத்தளமபல் நிலைககு உள்ளாக்கப்படுவது தமிழ்ப் பெணகளை அதிகளவு பாதிபபுக்குள்ளாக்கியது.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் தமிழர்களது வாழ்க்கையை இயல்புநிலைக்குத் திருபபும் என்ற இயல்பான எதிர்பார்ப்புடன் இருந்த தமிழ்மக்களுக்கு கடந்துபோன மூன்று வருடங்களும் ஏமாற்றத்தையே தந்தது.

திணிக்கப்பட்ட போரினால் இன்னலுற்ற தமிழ்மக்கள் மீது சுனாமிப் பேரலை அனர்த்தமும் கவிந்தபொழுது தமிழீழ விடுதலைப்புலிகளே உடனடி மீட்புப் பணிகளிலும் நிவாரண வேலைகளிலும் ஈடுபட்டனர். இப்பணிகள் இன்றும் தொடர்கின்றன. ஆனால் பேரிடருக்கு முகம் கொடுக்கவும் தொடர்பணிகளில ஈடுபடவும் அரசாங்கம் பொறியமைவு திறனைக் கொண்டிருக்கவில்லை. பேரினவாத அரசியல் கலாசாரத்தை அரவணைத்து ஆழ்ந்துபோயிருக்கும் அரசாங்கம் சாவதேச நிதி மறறும பொருள உதவி வடக்குக் கிழக்கு மக்களுக்கு சென்றடைவதிலும் இனபபாரபட்சமே காட்டுகின்றது.

உதாரணமாக யாழ்.மாவட்ட அரசாஙகத் தகவல்களின் பிரகாரம், 1250பேர் இறந்துபோயிருக்க இதுவரையில் 355பேருக்கு மட்டுமே அரையும் குறையுமாக மரணக்கொடுப்பனவு கிடைத்துள்ளது. உலர் உணவு விநியோகமும மிகச் சொற்பமே.

நிவாரணப் பணிகளிலும் தமிழீழ விடுதலைப்புலிகள் சிறப்பாக கட்டுக்கோப்பாக இயஙகுவதைச் சர்வதேசச் சமூகம பாராட்டியருந்தது என்பது கவனத்திற்குரியது. அரசாங்கம் தொடர்ந்து விடுதலைப்புலிகளைச் சீண்டும் மலின தந்திரோபாயத்தில் ஈடுபடும்போதெல்லாம் போர்நிறுதத உடன்படிக்கை மீறப்பட்டபோதெல்லாம், விடுதலைப்புலிகள் அரசியல், இராணுவ இராஜதந்திர சமநிலையில் வலுக்கொண்டிருந்தும் பொறுமை காத்திருநதனர். தலைமையுடன் நிவாரண செயற்பாடுகள் குறித்து ஆலோசனை கலந்துவிட்டு திரும்பிக்கொண்டிருந்த நிராயுதபாணிகளான மட்டு - அம்பாறை மாவட்டங்களின் அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனும், உடன் சென்ற போராளிகளும் முனனைய பாராளுமன்ற உறுப்பினர் அ.சந்திரநேருவும் கோழைத்தனமாகக் கொல்லப்பட்டனர். இக்கொலைகளுக்கு அவை இடம் பெற்ற பிரதேசம் அரச கட்டுப்பாட்டுப் பகுதி என்ற வகையில அரசாங்கமும் படைத்தரபபுமே பொறுப்பெடுக்கவேண்டும் என்பது மட்டுமலலாமல் கொலைகளில் படைததரப்பினரது நேரடியான முழுப் பங்களிப்பும் இருந்துள்ளதென்பது தெளிவுபட்டுள்ளது.

பேரலையினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கான நிவாரண உதவிகள் சமமாகப் பகிரப்படுவதற்கு விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்டுள்ள செயலணியினரே திறன் கொணடவர்கள் என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டும் அரசாஙகமானது நிவாரணப் பணிகளுக்கான கட்டமைபபுக் குறித்த விடுதலைப்புலிகளது முன்மொழிவுகள பற்றிய தமது நிலைபபாடடை தெரிவிக்கப பின்னடிபபதன்மூலம இழுத்தடிக்கின்றது.

அதிகார நாற்காலிகளைத் தக்கவைத்தும் அரசியல் சூதாட்டத்தின் பகடைக்காயகளாக நிவாரணப்பணிகள் குறுகிய பேரினவாதத தளத்தில் நகாத்தப்படுகின்றன.

நிவாரணம் மற்றும் புனர்வாழ்வுகளுககான சர்வதேச சமூக உதவிகள் யுத்தத் தயாரிப்புகளுக்காக திசை திருப்பப்படுகின்றனவா என்ற நியாயமான சந்தேகம் எழுந்துள்ளது. ஸ்ரீலங்காவின சமாதான அதிகாரப்பூச்சும் கபடத்தனம் கொண்டதே. (ப-19)

## வெளிநாடுகள் வழங்கிய நிவாரண நிதியை அபிவிருத்தித் திட்டங்களுக்கு பயன்படுத்தக்கூடாது என்கிறார் ரணில்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்காக கிடைக்கவுள்ள வெளிநாட்டு நிதி உதவிகளை விரைவில் பெற்றுக்கொள்ளும் வகையில் அரசாங்கம் செயற்படவேண்டும் என எதிர்கட்சித் தலைவர் ரணில விககிரம சிங்க தெரிவித்துள்ளார்.

இந்த நிதியை பாதிக்கப்பட்டவர்களுக்கு பகிர்ந்தளித்து அவர்களது வாழ்க்கைத்தரததை மேம்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பு என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை நிவாரணங்களுக்காக வழக்கப்படும் வெளிநாட்டு நிதி உதவியை புதிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு பயன்படுத்தக்கூடாது என்றும் எதிர்கடசித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

கடற்பேரலை தாக்கததினால் பாதிக்கப்பட்ட தென்மாகாணத்தின் சில பிரதேசஙகளுககு நேற்று முன்தினம் விஜயம் செய்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, காலித்துறைமுகத்தின் வர்த்தக சமூகத்தினரை சந்தித்தபோது இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சுற்றுலாத் துறையை மீளக்கட்டியெழுப்புவதற்கு 100 மீற்றர் எல்லையை அகற்றவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை நலன்புரி நிலையங்கள் சிலவற்றைச் சென்று பாாவையிடட எதிர்ககட்சித் தலைவர் அங்குள்ள மக்களுக்கு நிவாரணப் பொருட்களையும் வழங்கினார்.

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கபபட்ட மக்களினது மனோ நிலையைக் கட்டியெழுப்ப சமயஸ்தலங்களை மையமாகக்கொண்டு ஆலோசனை சேவைமுறை ஒன்றை நடைமுறைப்படுத்தவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (க-9)

## உதவு பொருட்கள் வழங்கல்

(தென்மராட்சி)

சுனாமியினால் இடம்பெயர்ந்து சாவகச்சேரி கோவில் குடியிருப்பு தேவாலயத்தை அண்டியிருக்கும் சுமார் 44 குடும்பஙகளுககான சமையல் பாத்திரங்களையும், அத்தியாவசிய பொருட்களையும் கனடாவலிருந்து தென்மராட்சிக்கு வருகைதந்திருந்த தெனமராட்சி நிறுவனத்தைச் சோந்த பிரமுகா வீ.எஸ். துரைராஜா நேற்றையதினம் அன்பளிப்பாக வழங்கிவைத்தார்.

சாவகச்சேரி பிரதேச செயலக வளவில இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதேச செயலக அதிகாரிகள், லயன்ஸ்கழகம், அறவழிப் போராட்டக்குழு மற்றும் வணிகர்கழகங்களின் உறுப்பினர்களும் பங்குகொணடிருந்தனர்.

இக்குடும்பங்கள், முல்லைத்தீவு, செம்பியன்பற்று, தாளையடி பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என பது குறிப்பிடத்தக்கதாகும். (ப-16)

## உண்டியல்காரரிடம் பணம் உருவமுயன்ற இரு இளைஞர்கள் விளக்கமறியலில்!

(வவுனியா)

கனடாவிலிருந்து உண்டியலில பணம் அனுப்பியதாகத் தெரிவித்துப் போலியாக உள்ளூரிலிருந்து உள்ள உண்டியல முகவர் ஒருவருக்குத் தொலைநகல் அனுப்பி 5இலட்சத்து 35 ஆயிரம் ரூபா பணத்தை மோசடி செய்ய முயன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள இரு இளைஞர்களை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில வைக்குமாறு வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார்.

கனடாவில் உள்ள ஒருவர் 5இலட்சத்து 35ஆயிரம் ரூபா பணததை வவுனியாவில் உள்ள ஒருவருககு அனுபபியுள்ளதாகத் தொிவித்து, அவருடைய பெயர் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகிய விபரங்களை உள்ளடக்கிய தொலைநகல் ஒன்றை வவுனியாவிலிருந்தே வவுனியாவில் உள்ள உண்டியல் முகவர் ஒருவருக்கு அனுப்பிவிட்டு, கடாவிலிருந்து தமக்குப் பணம் அனுபபப்பட்டுள்ளதாகத் தெரிவிதது அதனைத தருமாறு கோரிய இரண்டு இளைஞர்கள் மீது சநதேகம் கொணட உண்டியல் முகவர் ஒருவர் கொடுத்த தகவலையடுத்து வவுனியாவில் உள்ள மோசடிப் பிரிவு பொலிஸார் இளைஞர்கள் இருவரையும் கைதுசெய்தனர்.

கனடாவிலிருந்து பணம அனுப்பப்பட்டதாகவோ அல்லது பணம் அனுப்பிவைக்கப்படுவதாகவோ தகவல் எதுவும் தமக்குக் கிடைக்காத நிலையில் தொலைநகல் தகவல் மடடும் வந்த உடனேயே பணத்தைப் பெற்றுச் செல்வதற்காக வந்த இளைஞர்கள் மீது தமக்குச் சந்தேகம் எழுந்ததனாலேயே தான் பொலிசாருககுத் தகவல் கொடுத்ததாக குறிபபிட்ட உண்டியல் முகவர் பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக எஸ்.ஜேசுதான், பி.றெஜினோல்ட் ஆகிய இரு இளைஞர்களே கைது செய்யப்பட்டதாகவும், இவர்களை விசாரணை செய்தபோது கனடாவிலிருந்து அனுப்பியதைப் போன்று போலியாக வவுனியாவிருந்தே தொலைநகல் அனுப்பிவைக்கப்பட்ட விடயம் வெளிச்சத்திற்கு வந்துள்ளதாகவும் பொலிஸார் நீதிமன்றததல் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்களை விசேட பாதுகாப்பில் வைக்குமாறு அனுராதபுரத்தில உள்ள சிறைசசாலை அத்தியட்சகருக்கு உத்தரவிட்டுள்ள வவுனியா மாவட்ட நதிபதி, கடந்தவாரம் இடம்பெற்ற 50 ஆயிரம் ரூபா பண மோசடி சம்பவத்துடன் இவர்களுக்கு சம்பநதம உள்ளதா என்பதைக் கண்டறிவதற்கான விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கடந்தவாரம், பூந்தோட்டத்தில் உள்ள குடும்பப்பெண் ஒருவரிடம், லண்டனில் உள்ள அவருடைய மகன் தனக்கு 50 ஆயிரம் கொடுக்குமாறு தெரிவித்து தகவல் அனுப்பியுள்ளதாகவும், அந்தப் பணத்தை வவுனியாவிலுள்ள லொட்ஜ் ஒன்றில் தன்னிடம் கொண்டுவந்து கொடுக்குமாறு தெரிவித்து இளைஞன் ஒருவன் 50 ஆயிரம் ரூபா பணததைப பெற்றுக்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணத்தைக் கொடுத்ததன் பின்னர், அனறு மாலை லண்டனில் உள்ள தனது மகனுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு கேடடபோதே, அவ்வாறு எவருக்கும் பணம் கொடுக்கச் சொல்லி தனது மகன் சொல்லவில்லை என்ற உண்மை அந்தத் தாயாருக்குத் தெரியவந்துள்ளது. (க)

## பேச்சுப் போட்டி

(யாழப்பாணம)

யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்கம வருடம்தோறும் பாடசாலைகளிற்கிடையே நடாத்தும விஞ்ஞான நிகழ்ச்சி இவ்வருடமும் சிறப்பாக நடைபெறவுளளது.

எதிர்வரும் 23ஆம் திகதி புதன்கிழமை மு.ப.10மணியளவில யாழ். பல்கலைக்கழகததின் நூலக கேட்போர்கூடத்தில் விஞ்ஞானப் பேச்சுப்போட்டி நடைபெறவுள்ளது.

போட்டியாளர்களின் அனுமதி அட்டைகள் யாவும் அந்தநத பாடசாலை அதிபரின் ஊடாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக விஞ்ஞான சஙகததின் தலைவர் க.இராசதுரை அறிவித்துள்ளார். (க)

## சாவகச்சேரி வைத்தியசாலைக்கு நிக்கொட் திட்டத்தின்கீழ் 50மில்லியன் ரூபா ஒதுக்கீடு

இரணடாயிரமாம் ஆணடில் தென்மராட்சியில் இடம்பெறற யுதததன்போது சேதமடைந்த சாவகச்சேரி மாவட்ட வைததியசாலையின் புனரமைப்புப் பணிகளுக்கென நிக்கொட நிறுவனம் இவ்வருடம் 50 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கடு செயதுள்ளது என யாழ். மாவட்ட அரசாங்க அதிபா கே.கணேஸ தெரிவித்துள்ளார்.

இந்த வைத்தியசாலையில் புனரமைப்புக்கு மொத்தமாக 311 மில்லியன் ரூபா தேவையென மதிப்பீடு செய்யப்பட்டுள்ள போதிலும் கூட இவ்வருட நிதி ஒதுக்கீட்டில் 50 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யபபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வைததியசாலையில் பதினான்கு கட்டில்கள கொண்ட பிரசவவிடுதிக கட்டிடம் ஒன்றினை அமைப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி கடந்தவருடம் நிதி ஒதுககீடு செயதிருந்தமையும் தெரியவந்துள்ளது. (ப-16)

# கௌசல்யன் குழு படுகொலை செய்யப்பட்டமை சமாதான முயற்சிகளை ஆட்டம் காணவைத்துள்ளது

## வடமாகாண அதிபர் சங்கம் கடும் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

**மட்டு - அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யன் உட்பட்ட போராளிகளும், மாமனிதர் அரியநாயகம் சந்திரநேருவும் அரச இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்டமையை வடமாகாண அதிபர்கள் சங்கம் மிக வன்மையாகக் கண்டிக்கிறது.**

இவ்வாறு வடமாகாண அதிபர்கள் சங்கம் தனது கண்டன அறிக்கையைத் தெரிவித்துள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

சமாதான உடன்படிக்கையின் பின்னர் விடுதலைபபுலிகள் ஆயுதமின்றி அரசியல் வேலைகளிலும், மக்களுக்கான பணிகளிலும் ஈடுபட்டு வருவது உலகமறிந்தது. அதிலும் குறிப்பாக அண்மையில் சுனாமி அனர்த்தத்தில் அல்லல் பட்ட தமிழ், முஸ்லீம் மக்களின துயர் துடைப்பதையே முழு நோககாகக்கொண்டு செயற்பட்டு வந்த வேளையில் கௌசல்யன் உட்பட்ட போராளிகளை திட்டமிட்டு படுகொலை செய்தமையானது எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாததொன்றாகும். பொறுமை காக்கும் புலிகளை சீண்டி மீண்டும் யுத்தத்திற்கு இழுக்கும் நடவடிக்கையாகவே இது கருதப்பட வேண்டியிருக்கிறது.

புரிந்துணர்வு ஒப்பநதத்தின் பின்னர் இராணுவத்தினராலும், தேசவிரோத சக்திகளாலும் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளின் உச்சக்கட்டமாக கௌசலயனின் கொலை அமைந்துள்ளது. இது சமாதான பேச்சுவார்த்தைக்கு மாத்திரமன்றி புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையையே ஆட்டம் காணவைக்கும் ஒரு சம்பவமாகும். இது தமிழ் பேசும் மக்களுக்கு மட்டுமன்றி சமாதான சக வாழ்வை விரும்பும் இலங்கையர் அனைவருக்கும் பேரதிர்சசியை ஏற்படுத்தியுள்ளது மட்டுமன்றி சர்வதேசத்தையும் கவலையில் ஆழ்த்தியுள்ளது.

சமாதான முயற்சிகளுக்கு ஊறு விளைவிக்கும் இத்தகைய கொடூரச் செயல்களின் பின்னணியில் அரசும் இராணுவப் படைகளும் இருப்பதாகத் தமிழ் பேசும் மக்கள் ஐயுறுகின்றனர். எனவே இக்கொலைகளை மிக வன்மையாகக் கண்டிப்பதுடன், கொலைச் சூத்திரதாரிகளை வெளிக்கொணர இலங்கை அரசுககுச சர்வதேச சமூகம அழுத்தம் கொடுக்கவேண்டும் என்றும் இவ்வாறான சம்பவங்கள் எனியும் நடைபெறாமல் இருப்பதற்கு அரசு உததரவாதம் அளிக்கவேண்டும் என்றும் வடமாகாண அதிபர் சங்கம கேட்டுக் கொள்கிறது என்றுள்ளது. (ப)

# குடிவரவு - குடியகல்வு சட்டத்தில் திருத்தம் செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

குடிவரவு - குடியகல்வு சட்டத்தை மீறுபவர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கும் நோக்குடன் குடிவரவு - குடியகல்வு சடடததில திருத்தம் கொண்டு வர அரசாங்கம் நடவடிககை எடுத்துள்ளது.

இதேவேளை தற்போது நடைமுறையிலுள்ள குடிவரவு- குடியகல்வு சட்டத்திற்குப் பதிலாக புதிய சட்டமூலம் ஒன்று பாராளுமன்றத்தல் சமாப்பிக்கப்படும் என நீதி அமைச்சர் ஜென் செனவிரத்தின தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்பும் செயற்பாடுகளுக்குக் குறைந்தபட்சம் ஐந்து வருடம் முதல் 20 வருடகால சிறைத்தண்டனை விதிப்பதற்கான உத்தேச சட்டமூலத்தின் யோசனைகளும் இப்புதிய சட்டமூலத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக சட்டவிரோதமாக ஆட்களை வெளிநாடுகளுக்கு அழைத்துச் செல்வோா மீதான குற்றச்சாட்டுககள் நிருபிக்கபபட்டால் அதறகு சிறைத்தண்டனையும் 5இலட்சத்திற்கும் குறையாத அபராதமும் விதிக்கும் யோசனையும் முன்வைக்கப்பட்டுளளது.

இந்த உத்தேச சட்டமூலம் சட்ட வரைபு திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு சட்டமா அதிபர் திணைக்களத்தற்கு சமாபபிக்கப்பட்டுள்ளதாகவும் தேவைபபடின் சட்டமா அதிபர் திணைக்களம் அவற்றில் திருத்தங்களை மேற்கொள்ள்லாம் என்று அமைசசர் ஜென் செனவிரத்தின தெரிவித்துள்ளார். (க-9)

# புதிய சிறுவர் இல்லங்கள் அமைக்கப்படுவதை சிறுவர் நன்நடத்தைத் திணைக்களம் அனுமதிக்காது

## சிறுவர் நன்நடத்தை அதிகாரி பி.ரவிச்சந்திரன் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இன்றைய நிலையில் எந்தவொரு புதிய சிறுவர் இல்லங்கள் ஆரமபிக்கப்படுவதை வடக்கு கிழக்கு மாகாண நனநடததைச் சேவைகள் திணைக்களம் அனுமதிக்காது என வடக்கு கிழக்கு மாகாண நன்நடத்தை சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்கள தலைமைக்காரியாலய நன்நடத்தை உததியோகததா் பி.ரவிசசந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சுனாமி அனர்த்தத்தினால் சில சிறுவர்கள் தம் பராமரிப்பாளர்களை இழந்துள்ளார்கள். இவர்களுக்கு விசேட பாதுகாப்பு தேவைப்படுகிறது.

சிறுவர்கள் தாம் வாழும் சமுதாயத்திலிருந்து தனிமைப்படுததலாகாது. அனேகமான சிறாா்கள் இரத்த உறவு குடும்பங்களின் அங்கத்தவர்களால் அல்லது சிறுவர்பால் அக்கறை கொண்ட சமுதாயத்தில் வேறு உறுப்பினருடன் தங்குவதற்கு நன்நடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைத் திணைக்களமானது முயற்சயினை எடுத்துவருகிறது.

எனவே இவ்வேளையில் திணைக்களம் எந்தவொரு புதிய சிறுவா இலலங்கள் ஆரம்பிக்கப் படுவதை அனுமதிக்காது என வும் மேலும் தெரிவித்துள்ளார். (ப-35)

# மீன் உணவை தவிர்ப்போருக்கு விழிப்புணர்வு

(கொழும்பு)

மீன் உணவு வகைகளை மக்கள் தவிர்த்து வருவதைத் தடுப்பதற்கென அவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு விஷேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

கடற்றொழில் அமைச்சும், நாரா நிறுவனமும் இதனை இணைந்து மேற்கொளளவுளளன.

கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தலைவர் என.டி.நகில இதுதொடர்பாகத தகவல் தொிவிக்கும்போது நாட்டின் சகல பகுதிகளிலும் இத்தகைய விழிப்புணர்வு நடவடிக்கைகள் ஏற்படுததப்படுமெனத் தெரிவித்தார். (க-7)

# தெங்குச் செய்கையாளருக்கு நிவாரணம் வழங்கத் திட்டம்

(கொழும்பு)

தெங்குப் பயிர்ச்செய்கையாளர் மற்றும் அதுதொடர்பான கைத்தொழிலாளருக்கும், சுனாமி அனாத்தத்தினபின் இததொழிலை மேற்கொளவோர்ககும் நிவாரணம வழங்குவதற்கான திட்டமொன்றைப் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு தயாரித்துள்ளது.

பாதிக்கப்பட்ட கைத்தொழிலாளர்கள், ஊழியர்கள் தொடர்பான புள்ளி விபரங்கள் தற்போது திரட்டப்படுவதாக தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின தலைவர் பேர்ஷி மது ஹெதர தெரிவித்துள்ளார்.

சுனாமி அனர்த்தத்தினால் தெனனநதுமபு உற்பத்தித்தொழில முயற்சியில் ஈடுபட்டிருந்த கரையோரக் கிராமவாசிகள் பெருந்தொகையானோர் பாதிக்கப்பட்டு, அவர்களது ஜீவனோபாயத்தை இழந்துள்ளனர்.

தேங்காயெண்ணெய் ஆலைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கு 2 கோடி ரூபாவரை நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை மதிப்பிட்டுள்ளது.

இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடாபாக சபை ஆராய்ந்து வருகிறது. (க-7)

# நியமனம்

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்கப் பிரிவின் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் பாதிககப்பட்ட மக்களின் மீள்குடியேற்றம், நிவாரண உதவிகள் மற்றும் வீடுகளை அமைத்தல் போன்ற நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்காக, மேற்படி உதவி அரசாங்க அதிபர். பணி மனைக்கு 6கிராமசேவக அலுவலர்களை நியமித்தார்.

பருத்தித்துறை, கரவெட்டி, தென்மராட்சிப் பிரதேசங்களிலிருந்து தலா 2 கிராமசேவகர்கள் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேசால் மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவிற்கு நியமிக்கப்பட்டுள்ளனர். (ப-35)

# முச்சக்கரவண்டி சேவை பிரமாணங்களில் திருத்தம்

(கொழும்பு)

பொதுமக்களுக்கு சிறந்த சேவையை வழங்கும் நோக்கில் முசசக்கரவண்டி சேவைகள் தொடர்பான பிரமாணங்களைத் திருத்துவதற்கு வீதிப் போக்குவரத்து அதிகாரசபை நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இதுதொடர்பாக முச்சக்கரவண்டி உரிமையாளர்கள, சாரதிகள் அதுதொடர்பான அமைப்புக்களைச் சார்ந்தவர்களிடமிருந்து ஆலோசனைகள் பெற்றுக் கொள்ளப்படவுள்ளன. (க-7)

# சிறை

சட்டவிரோதமாக அரச சாராயத்தை விற்ற குற்றத்தின் பெயரில் கெருடாவில் தொண்டமனாறு பகுதியைச் சேர்ந்த ஒருவருக்குப் பருத்தித்துறை நீதிமற்றம் 6மாத சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது. (ப-101)

# புங்குடுதீவில் கணனிப் பயிற்சி

(புங்குடுதீவு)

புங்குடுதீவிலிருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும மக்களின உதவியுடனும், யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜின் அனுசரணையுடனும் இம்மாத இறுதியில் புங்குடுதீவில் கணனிப் பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்பயிற்சி நெறிக்கு ஆர்வமுள்ள அனைத்துத் தீவுப்பகுதி மாணவர்களும் அனுமதிக்கப்படவுள்ளனர்.

மேலதிக விபரங்களுக்கு, சகோதரன் ஏ.ஆர்.அம்பலவாணர், 1ஆம் வட்டாராம், (மாரியம்மன் கோவில் ஒழுங்கை முன்பாக) பெருங்காட்டுச் சந்தி, புங்குடுதீவு என்ற விலாசத்துடன் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ தொடர்புகொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

# பரீட்சை

(சுதுமலை)

சுகாதாரப் போசாக்கு நலனோபு அமைசசின் கீழ உள்ள வைத்தியசாலைகள், சுகாதார நிறுவனங்களில் கடமைபுரியும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களிற்கு தரம் II வகுப்பு ஏயிற்கு உயர்த்துவதறகான வினைததிறமை காண் தடைப் பரீட்சைக்குரிய விண்ணப்பங்களைச் சுகாதார அமைச்சின் பரீட்சைகள் பிரிவு சுற்றறிக்கை மூலம் கோரியுள்ளது.

ஏற்கனவே முதலாம வினைத திறமை காண் தடைப்பரீட்சையில் சித்தி எய்தி வகுப்பு II ஏயிற்கு நியமனம் செய்யப்பட்ட கடிதம் உள்ளவர்கள் மட்டுமே இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

இப்பரீட்சை மார்ச் மாதம் 27ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ரு-252)

# ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச சபைக்குட்பட்ட அனைத்துத் திணைக்களத்தலைவர்கள் மற்றும் வர்த்தகப பிரமுகர்கள், கிராம சபை அங்கத்தவர்களுக்கான ஒருங்கிணைப்புக் கூட்டம் எதிர் வரும் 22ஆம் திகதி செவ்வாய்க் கிழமை ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனை மண்டபத்தில் காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (க)

# தயாவுக்கு இடமாற்றம்

(துன்னாலை)

வடமராட்சி பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.தயா இடமாற்றமாகி மட்டக்களப்புக்குச் செல்கிறார்.

இவரது இடத்திற்கு மானிப்பாய் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளராகவிருக கின்ற இன்பன நியமிக்கப்பட்டுளளார். (த-101)

# மீள இயக்கம்

(மருதங்கேணி)

வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் நலன்புரிநிலையங்களாக இருந்துவந்த சகல பாடசாலைகளும் கல்விச் செயற்பாடுகளுக்காக மீண்டும் ஆரம்பித்துள்ளன.

பாடசாலை நலன்புரிநிலையங்களில் தங்கியிருந்த மக்கள் இடைத்தங்கள் நிலையங்களுக்கும், சொந்த வீடுகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதையடுத்தே இவை இயஙக ஆரம்பித்துள்ளன. (ப-35)

# காரைதீவில் அபூர்வம்! மாவிலைகளிலிருந்து தேன்

காரைதீவிலுள்ள மாமரங்களில் கடந்த இருதினங்களாக தேன் வடிந்து கொண்டிருக்கிறது. காரைதீவிலுள்ள 7 மாமரங்களின் இலைகளிலிருந்து தேன் வடிவதைக் காணமுடிகிறது.

பகல் வேளைகளில் மழைத்தூறல் போன்று தேன் கொட்டுவதைக் காணக்கூடியதாகவுள்ளது. மாணிக்கம். வலலிபுரம் என்பவரின் வீட்டிலுள்ள மாமரத்தில் பொலித்தீன்பை கட்டியுள்ளனர். அதனுள் 1/4போத்தல் அளவில் தேன் வடிந்துள்ளது.

சாமித்தம்பி வேல்முருகு என்பவரின் வீட்டிலுள்ள இரு மாமரங்களிலுமிருந்து தேன் வடிந்து நிலத்தில் படையாகக் காட்சியளிக்கிறது.

பூத்த மாமரத்திலிருந்தும் பூக்காத மாமரத்திலிருந்தும் தேன் கொட்டுகிறது. தொட்டு நக்கிப்பார்த்தால் இனிக்கிறது.

அதேவேளை அட்டாளைச்சேனை பகுதியிலும் சில மாமரங்களில் தேன் வடிவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சுனாமிக்குப் பின்னரான இந்த அதிசய நிகழ்வுக்குத் தரையில ஏற்பட்டுள்ள மாற்றம் அல்லது காலநிலை மாற்றம் காரணமாக இருக்கலாமோ என மக்கள் சந்தேகம் தெரிவிக்கின்றனர். (ப)

# சில்லுகளின் அசைவால் ஏற்படும் பூகம்பம், பேரலை அனர்த்தங்கள்

குஜராத் மாநிலத்தில் பூஜ் நகரில் 2001 ஜனவரி 26 ஆம் திகதி கடும் பூகம்பம் ஏற்பட்ட போது சென்னையிலும் நில அதிர்வுப் பதிவுக் கருவியில் அது பதிவாகியது. பூஜ் நகரில் கடும சேதம் ஏற்பட்டு 20 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். ஆனால், செனனையில் எந்தச் சேதமும் ஏற்படவில்லை. சென்னையிலிருந்து குஜராத் சுமார் 1820 கிலோ மீற்றர். ஆனால், சென்னையிலிருந்து சுமாத்திரா தீவு 2,000 கிலோ மீற்றருக்கும் அப்பால் உள்ளது. அந்த சுமாத்திரா தவின் அருகே அதுவும் கடலுக்கு அடியல் சமீபத்தில் 2004 டிசம்பர் 26 இல் ஏற்பட்ட பூகம்பமோ, கடல்கோள் என்ற பேரலைகள் வடிவில் தமிழகத்தில் பல ஆயிரம் பேரின் உயிரைப் பலி வாங்கியுள்ளது.

கடலகோள்களை உண்டாககும் கடலடிப் பூகம்பம் குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே ஏற்பட இயலும். தவிரவும், இவ்வித் கடும் பூகம்பம் அடிக்கடி நிகழ்வது இல்லை. இதை நாம் அறிந்துகொள்ள பூமியின் மேற்பரப்புப் பற்றி சற்றுக் கவனிக்க வேண்டும். ஒரு தேங்காயைக் குடுமி நீக்கி சிதறு காயாக உடைத்தால் அது பல சில்லுகளாக உடையும். ஒரு தேங்காய் இப்படி 7 அல்லது 8 சில்லுகளாக உடைவதாக வைத்துக்கொள்வோம்.

அந்த சில்லுகளைச் சேகரித்து நீங்கள் சிரமப்பட்டு ஒன்றோடு ஒன்று சரியாகப் பொருத்தி முழுத் தேங்காய் மாதிரி ஆக்க முடியும். உடைந்த சில்லுகளை ஒன்று சேர்த்து உண்டாக்கப்பட்ட தேஙகாய் போலத்தான் பூமியின் மேற்பரப்பு உள்ளது. பூமி உருணடையாக இருநத போதிலும் அது பல துண்டுகளை ஒன்றோடு சேர்த்துத் தைத்த கால்பந்து போலத் தான் உள்ளது. பூமியின் மேற்பரப்பை - பசுபிக் சில்லு, வட அமெரிக்க சில்லு, தென் அமெரிக்க சில்லு, ஆபிரிக்க சில்லு, இந்திய சில்லு என பல சில்லுகள் போர்த்துள்ளன. இந்திய சில்லு மீது இந்தியத் துணைக் கண்டம், அரபுக் கடல், வங்காள விரிகுடாவின் ஒரு பகுதி, இந்து மாகடலின் ஒரு பகுதி, அவுஸ்திரேலியா முதலியவை அமைந்துள்ளன.

பூமியின் மீது பிரதானமாக எட்டு சில்லுகள் உள்ளன. சில சில்லுகள் பரப்பளவில் பெரியவை. இந்த சில்லுகளில் துணைச் சில்லுகளும் உண்டு. இந்திய சில்லுக்குக் கிழக்கே உள்ள பர்மா இப்படியான சிறிய சில்லு ஆகும். இந்திய சில்லு உட்பட எல்லா சில்லுகளுமே 80 முதல் 400 கிலோமீற்றர் பருமன கொண்ட பாறைகளால் ஆனவை. பூமியில் மேலும் மேலும் ஆழத்துக்குச் செல்லும போது வெப்பம் அதிகரிக்கும்.

ஆகவே, சில்லுப் பாறைகள் கெட்டியாக இராமல் நெகிழ்ந்த தன்மை கொண்டவை. இவை ஒரே இடத்தில் நிலையாக இல்லாமல நகருகின்றன. இவ் விதம நகரும் வேகம் ஓராண்டுக்கு 2 முதல் 10 சென்ரிமீற்றர் வரை இருக்கலாம். இந்திய சில்லு கிட்டத்தட்ட வடக்கு நோக்கி நகருகிறது. பஸ்ஸுக்குள் நிற்கும் போது பஸ் நகருவதால் நீங்களும் நகருவதாக ஆகிறீர்கள்.

அந்த மாதிரியில் சில்லு நகருவதால் அதன் மீது அமைந்துள்ள இந்தியத் துணைக் கண்டமும் அதைச் சுற்றியுள்ள கடலகளும் ஒன்று சேர்ந்து இடம பெயருகின்றன. இப்படி நகரும் போது பல விளைவுகள் ஏற்படுகின்றன. பல மில்லியன் ஆண்டுகளுககு முன்னர் ஆபிரிக்காவுடன ஒட்டிக்கொண்டிருந்த இந்திய சில்லு வடக்கே நகர்ந்து ஆசியாவை உள்ளடக்கிய யுரேசிய சில்லுடன் மோதிய போது விளிமபுகள் புடைத்துக் கொண்டு உயர எழும்பின.

இதன் விளைவாகவே இமய மலை தோன்றியது. இந்திய சில்லு தொடர்ந்து நெருக்கி வருகிறது. இதன் விளைவாகவே உத்தராஞ்சல், அசாம் போன்ற இடங்களில் அவ்வப் போது பூகம்பம் ஏற்பட்டு வருகிறது. இவ்விதம், ஒன்றோடு ஒன்று மோதாமல் சில சில்லுகள் பக்க வாட்டில் உரசிச் செல்வதும் உண்டு. வேறு சில இடங்களில ஒரு சில்லு வேறு சில்லுக்கு அடியில் புதையுண்டு போவதும உண்டு.

ஒரு தலையணைக்கு அடியில நீங்கள ஒரு புத்தகத்தைச் செருக முடியும். அது போல, ஒரு சில்லுக்கு அடியில் இன்னொரு சில்லு நுழைகிறது. இதற்கு நேர் மாறாக, வேறு சில இடங்களில் அதுவரை ஒட்டி அமைந்த இரண்டு சில்லுகள் எதிர் எதிரான திசையில் நகருவது உண்டு. அட்லாண்டிக் கடலுக்கு அடியில் இவ்விதம் நிகழ்கிறது. அப்போது அவ்விரு சில்லுகள் சேருமிடததில் பூமிக்குள்ளிருந்து புது நிலம் தோன்றுகிறது.

அதாவது, சில்லுப் பெயர்ச்சியின விளைவாக, பூமியில் ஓரிடத்தில் அடிநிலப பாறைகள் பூமிக்குள புதைகின்ற அதேநேரத்தில் வேறிடத்தில் பூமிக்குள்ளிருந்து நெகிழ்ந்த பாறைகள் வெளியே பிதுக்கப்படுகின்றன. சில்லுகளின் இடப்பெயர்ச்சி காரணமாகப் பாதிக்கப்படுவது கடல்களே.

அதாவது, அமெரிக்கச் சில்லு இடது புறம் நோக்கியும் ஆபிரிககச் சில்லு வலது புறம் நோக்கியும் நகரும்போது அட்லாண்டிக் கடல் விரிவடையும்.

ஆனால், பசுபிக் கடலில் பல இடங்களில் சில்லுகளின் விளிம்புகள் பூமிக்குள்ளே செல்வதால் பசுபக் கடலின் பரப்பளவு எதிர காலத்தில் குறைந்து கொண்டே போகும். சில்லுப் பெயர்ச்சியால் காணாமல் போன கடல்களும் உண்டு. உதாரணமாக யுரேசிய சில்லுக்குத் தெற்கே, அதாவது, இப்போது திபெத் இருக்கின்ற இடத்தில் டெத்திஸ் என்ற கடல் இருந்தது.

இந்தியா வடக்கு நோக்கி நகர்ந்து யுரேசிய சில்லுடன் சேர்ந்ததால் டெத்திஸ் கடல் மறைந்துபோய்விட்டது. இது ஒருபுறம் இருக்க, இந்திய சில்லன் கிழக்கு விளிம்பு பர்மா சில்லுக்கு அடியே புதைகிறது.

அதாவது பல கிலோ மீற்றர் தடிப்பும் பல கிலோமீற்றர் நீளமும் கொண்ட பெரிய பாறைப் பாளம் இவ்விதம் இன்னொரு பாறைப் பாளத்துக்கு அடியில் வலுக் கட்டாயமாக நுழைகிறது. சில்லு விளிம்புகள் உள்நோக்கி பூமிக்குள் இறங்குகின்ற இடங்களில் நீண்ட அகழிகள் உண்டு.

இப்போது கடல்கோள் அலைகளைத் தோற்றுவித்த கடலடிப் பூகம்பம் ஏற்பட்ட இடததில் சுண்டா அகழி என்ற பெயரில் நீண்ட அகழி உள்ளது.

இவ்வித அகழிகள், சுற்றியுள்ள கடலைக் காட்டிலும் அதிக ஆழம் கொண்டவை. வேறு சில்லுக்கு அடியில் நுழையும் பாறைகள் கீழ் நோக்கி பூமிக்குள் இறங்கும். அவ்விதம், பாறைப் பாளம் உள் இறங்கும் இடங்களில் இயல்பாக எரிமலைகள் உண்டு. பாறைப் பாளங்கள் உள்ளே இறங்கும்போது மாவு மெஷினில் கோதுமை அல்லது அரிசி அரைபடுவது போல, பெரிய மலைகள் அளவுக்கு உள்ள பாறைப் பாளங்கள் அரைபட்டு மிகவும் சூடேறி நெருப்புக் குழம்பாக வடிவெடுக்கின்றன.

சுமாத்திரா தீவின் மேற்குப் பகுதியில் கடலுக்கு அடியில் பாறைப் பாளங்கள் பூமிக்குள் இறங்குகின்றன. கடலுக்கு அடியில் மிக நீண்ட தூரத்துக்கு இவ்விதம் நிகழ்கிறது. இந்தோனேசிய சுமாத்திரா தீவில் மட்டும் 35 இறகும் அதிகமான எரிமலைகள் உள்ளன.

இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ முதலிய நாடுகள் அமைந்த பூமிப பிராந்தியமானது, சில்லுப் பாறைகள் உள்ளே இறங்குவது அதிகம் நிகழ்வதாகும். இப்போது ஏற்பட்ட பூகம்பத்தைப் பொறுத்தவரையில் சுமாத்திரா தீவுக்குச் சற்று மேற்கே இந்திய சில்லின் விளிம்பில் 1,200 கிலோ மீற்றர் நீளமும் 20 மீறறர அகலமுமகொண்ட நிலப்பகுதி தனியே துண்டாகி உள்ளே விழுநதபோது தான் கடலடித் தரைக்கு அடியில் கடும் பூகம்பம் (ரிச்டர் அளவில் 9 ) ஏற்பட்டது.

அப்போது கடலடித் தரையானது, சில மீற்றர் உயரம் மேலே எழும்பிப் பிறகு கீழே இறங்கியது. கடலடித் தரையில் பெரும் பரப்பில் இவ்விதம் தரை உயர்ந்த போது அது இயல்பாக அப்பகுதிக்கு மேலே உள்ள கடலின் நீர் மட்டத்தில் பாதிப்பை உண்டாக்கியது.

அதாவது, அங்கு கடலின் மேற்பரப்பில் நீர்மட்டம் மேலே உயர்ந்து கீழே இறங்கியது. இது சலனமற்ற குளத்தில் ஒரு சிறிய கல்லைப் போட்டால் கல் விழுந்த இடத்திலிருந்து வட்ட வட்டமாக அலைகள் நாலாபுறங்களிலும் பரவுவதைப் போன்ற விளைவை உண்டாக்கியது.

அதுவே கடல்கோள் அலைகளாகும். கடந்த டிசம்பர் 26 ஆம் திகதி கடல்கோள் அலைகள் முதலில் இந்தியாவின் ஒரு பகுதியான நிக்கோபார், அந்தமான் தீவுகளைத் தான் தாக்கின. அப்போதே அங்கிருந்தவர்கள் உஷாரபடுத்தியிருந்தால் தமிழகத்தில் ஏற்பட்ட உயிர்ச் சேதத்தைப் பெருமளவுக்குக் குறைத்திருக்க முடியும்.

ஆனால், அந்தமான், நிக்கோபார் தீவுகளில் உயர பதவிகளில இருந்தவர்களில் யாருக்குமே கடல்கோள் என்றால் என்ன என்று தெரியாமல் போய்விட்டது என்றால் அது வியப்புக் குரியதே.


நன்றி: இணையத்தளம

# 100 மீ.எல்லையை தீர்மானிக்க மக்களுக்கு உரிமை உண்டு

## ரணில் தெரிவிப்பு

(காலி)

கடற்பரப்பில் இருந்து 100 மீற்றர் எல்லைக்குள் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளக் கூடாது என அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருப்பதனால் நாட்டின் கரையோரப் பொருளாதாரம் முழுமையாக வீழ்ச்சியடையும் அச்சுறுத்தல் தோன்றியிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



தாம் தொடர்ந்தும் கடற்கரையை அண்டிய பிரதேசங்களில் வாழ்வதா? இல்லையா என்பதைத் தீர்மானிக்கின்ற உரிமை குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழ்ந்த மக்களிடமே இருக்கவேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தென்மாகாணப் பிரதேசங்களுக்கு விஜயம் செய்து வரும் எதிர்க்கட்சித் தலைவர் நேற்றுமுன்தினம் காலியில் நடைபெற்ற கூட்டமொன்றில் வைத்தே இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் சுற்றுலாத்துறையை முன்னேற்றம் செய்ய வேண்டுமாயின் 100 மீற்றர் எல்லை நீக்கப்படவேண்டுமென அவர் மேலுமதெரிவித்தார். (4)

## சேதமடைந்த பாடசாலைகளைப் புனரமைக்க

# இத்தாலியுடன் இலங்கை உடன்படிக்கை கைச்சாத்து

(கொழும்பு)

சுனாமி அன்ர்த்தத்தினால் சேதமடைந்த பாடசாலைகளைப் புனரமைப்புச் செய்வது தொடர்பான உடன்படிக்கையொன்றில் இலங்கை அரசாங்கமும், இத்தாலிய அரசாங்கமும் கைச்சாத்திட்டுள்ளன.

இந்த உடன்படிக்கையில் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் நிதிய்மைச்சின் செயலாளர் பி.வி.ஜெயசுந்தரவும், கல்வியமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டி மெல்லும் கைச்சாத்திட்டனர். இத்தாலிய அரசாங்கத்தின் சார்பில் இலங்கைக்கான இத்தாலியத்தூதுவர் இவ் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார்.

இந்த உடன்படிக்கைக்கு அமைய 19 பாடசாலைகளை புனரமைப்பதற்கு இத்தாலிய அரசாங்கத்தின் ஒத்துழைப்புக் கிடைக்கவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 2 பாடசாலைகளும், திருகோணமலையில் 8 பாடசாலைகளும், அம்பாறை மாவட்டத்தில் 4 பாடசாலைகளும், காலி மாவட்டத்தில் 5 பாடசாலைகளும் புனரமைக்கப்படவுள்ளன.

இந்தப் பாடசாலைகளுக்குத் தேவையான கற்றல் உபகரணங்களை வழங்கவும் இத்தாலிய அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது. (ற-4)

# சொல்ஹெய்ம் வார இறுதியில் இலங்கைக்கு விஜயம் செய்வார்

(கொழும்பு)

நோர்வேயின் விசேட சமாதான துாதுவர் எரிக்சொல்ஹெய்ம எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்கு வருகிறார்.

நேற்று முன்தினம் லண்டனில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசிய விடயங்கள் குறித்து அரசுதரப்புக்கு எடுத்துக் கூறுவதற்கே இலங்கைக்கு வருகிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஐந்து நாள் விஜயம் மேற்கொண்டுவரும் இவர் இலங்கையில் தங்கியிருக்கும் காலகப் பகுதியில் கிளிநொச்சிக்கு சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடனும் கொழும்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால எதிர்க் கட்சிததலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்துவார் என்று தெரிவிக்கப்படுகிறது.(க-4)

# கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையம் கிராம மாதர் அபிவிருத்திச் சங்கங்களைப் பலப்படுத்துவதோடு, ஆற்றல் மேம்பாட்டுப் பயிற்சிகளையும் வழங்கிவருகின்றது.

அத்துடன், கிராமிய மாதர் சங்கங்களின் செயற்பாடுகளுக்கு ஊக்கமளிக்கும் முகமாக அச் சங்கங்களோடு சேர்ந்து செயற்படும் அங்கத்தவர்களின் பாடசாலை செல்லும் பிள்ளைகளிற்கு பாடசாலை பாக், சிறுவர்களிற்கான பயிற்சிப்புத்தகம் போன்ற கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

கோட்டை மீனாட்சியம்மன் மாதர் கிராம அபிவித்திச் சங்கம், ஈச்சமோட்டை, கடற்கரை வீதி, பாசையூர் மேற்கு கிராம மாதர் அபிவிருத்திச் சங்கம், நாவாநதுறை சனசமூக நிலைய மாதர்சங்கப் பிரிவு மற்றும் கொழுமபுத்துறை மகேந்திரபுரம் மாதர் சங்கம் ஆகியவற்றிற்கே இப்பொருட்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற)

# சமாதான முயற்சிகள் மீளவும் ஆரம்பிக்கப்படுவதற்கு ஒட்டுப் படைகளின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும்

## சமாதானத்தின் மீது நம்பிக்கை ஏற்படுத்த இதுவே சிறந்த வழி என்கிறார் பாலா



(லண்டன்)

**சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கு சிறீலங்கா அரசாங்கப் படையினருடன் இயங்கும் ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களைக் களையவேண்டும். அனர்த்த நிவாரணத்துக்காக வெளிநாடுகள் அளித்துள்ள நிதியை நீதியாகப் பகிர்வதற்கு பொதுக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும். இவை இரண்டையும் சிறீலங்கா அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.**

இவ்வாறு புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் திங்கட்கிழமை தன்னை சந்தித்த நோர்வே அனுசரணையாளர் குழுவிடம் எடுத்துக் கூறியுள்ளார்.

கௌசல்யன் படுகொலையை அடுத்து சிறீலங்காவில் ஏற்பட்டுள்ள யுத்தநிறுத்தம் தொடர்பில் நிச்சயமற்ற நிலைமையை போக்கும் ஒரு முயற்சியாக நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், நோர்வே வெளிவிவகார அமைச்சு அதிகாரி லிசா கோல்டன் ஆகியோர் அடங்கிய குழு நேற்று அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை லண்டனில் அவரது இல்லத்தில் சந்தித்தனர்.

சுமார் மூன்று மணிநேரமாக நடைபெற்ற இந்தக்கலந்துரையாடலில் அரசியல் ஆலோசகர் பாலசிங்கம் கூறுகையில்,

அமைதிப் பேச்சுக்களுக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்க சிறீலங்கா அரசு இரண்டு குறிப்பிடத்தக்க வழிகளில் உதவி செய்ய வேண்டியுள்ள தேவை உள்ளது.

அதில் ஒன்று சிறீலங்கா இராணுவத் துடன் இயங்கும் ஆயுதக்குழுக்களின் ஆயுதங்கள் களையப்படவேண்டும். அல்லது அவர்களை சிறீலங்கா படைப்பிரிவுகளுக்குள் உள்வாங்கி வடக்கு- கிழக்குக்கு வெளியே நிறுத்தப்படவேண்டும். 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே இந்த விடயம் உடனடியாக நடைமுறைக்குவரும் வண்ணம் சிறீலங்கா அரசினால மேற்கொள்ளப்படவேண்டும் என்று வலியுறுத்தினார். புலிகளின் மட்டு.-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட அவரது குழுவினர் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கு விடுதலைப்புலிகளின் கடுமையான கண்டனத்தையும் தெரிவித்தார்.

அமைதிப் பேச்சுக்களுக்கான சூழ்நிலைக்குரிய மற்றைய வழிமுறை குறித்து பாலா விளக்கமளிக்கையில்

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் புனரமைப்பு, புனர்நிர்மாண வேலைத்திட்டங்களை மேற்கொள்ள



வெளிநாடுகள் வழங்கிய நிதியை நீதியாகப் பகிர்வதற்கு புலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பு ஒன்றை சிறீலங்கா அரசு விரைவாக உருவாக்கவேண்டும். இது விடயத்தில் தற்போது தொடரும் இழுபறி முடிவுகுக் கொண்டுவரப்படவேண்டும் என்றார்.

அமைதிப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான உகந்த சூழ்நிலையை உருவாக்கும் எந்த நடவடிக்கையையும் அரசு மேற்கொள்வதாக எமக்குத் தெரியவில்லை என்றும் அவர் கூறினார். (ப-4)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மக்களுக்கு

# அரசாங்கத்தின் உதவிகள் சீராகக்கிடைக்கவில்லை

# தமிழர்புனர்வாழ்வுக்கழகமே உதவிகளை வழங்குகிறது

## பிரான்ஸ் பாராளுமன்ற உறுப்பினர் குளோத்லுவோர் உரை

(கொழும்பு)

ஆழிப்பேரலையில் பலியான மக்களின் நினைவாக பிரான்ஸ் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடத்திய சலங்கை பரத நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் நினைவுச்சுடரினை பாரிஸ் 12 மாநகர சபையின் உதவி நகரபிதா திருமதி. மொனிக் லுபுளோன் அம்மையாரும் துனி நகரசபையின் அங்கத்தவர் அலன் ஆனந்தனும் ஏற்றிவைத்தார்கள். அதனைத் தொடர்ந்து அக வணக்கத்துடன் நிகழ்வு ஆரம்பமாகியது.

பிரதம விருந்தினராக வல்துமாறன் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் குளோத்லுவோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

அவர் கடந்த வாரம் பிரான்ஸ் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வேண்டுகோளுக்கிணக்க் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வடக்கு- கிழக்குப் பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று அந்த மக்களின் அவல நிலையையும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் வேலைத்திட்டங்களையும் பார்த்து வந்தவர். அவர் பேசும்போது,

வடக்கு- கிழக்கு மக்களுக்கு இலங்கை அரசாங்கத்தின் உதவிகள் சரியான முறையில் கிடைக்கவில்லை என்பதை நான் உணர்கிறேன். தமிழர் புனர்வாழ்வுக் கழகமே அந்த மககளுக்கு முழு உதவிகளைச் செய்கிறார்கள்.

இங்கிருந்து செல்லும்போது நண்பர்களை பார்க்கச் செல்லும் மனநிலையில் சென்றேன். திரும்பிவரும்போது சகோதரர்களைப் பிரிந்துவரும் வேதனையுடன் வந்தேன். வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்குக் கிடைக்கும் உதவிகள் சகல பகுதிகளுக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதே பிரான்ஸ் அரசாங்கத்தின் நிலைப்பாடு.

வடக்கு- கிழக்குப் பகுதிகளைப் பொறுத்தவரை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் செய்யப்படும் வேலைத்திட்டங்கள் மிகவும் பாராட்டுக்குரியது. நீங்கள் கொடுக்கும் உதவிகள் சரியான முறையில் அங்கே பயன்படுத்தப்படுகின்றன. எல்லா மக்களும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு தொடர்ந்து உதவிகளை வழங்கவேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் பதினெட்டு பரத ஆசிரியர்களால் நெறிப்படுத்தப்பட்ட இருபத்தியொன்பது நடனங்கள் நடைபெற்றன.

அவற்றில் குறிப்பாக ஆசிரியர்களும் நடனங்களை வழங்கி நிகழ்வை சிறப்பித்தனர். இதில் 175க்கும் மேற்பட்ட பரத மாணவர்க்ள் பங்குபற்றினர். இவற்றில் பல நடனங்கள் கடற்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் துயரநிலையை எடுத்துக் கூறின.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தற்போதைய செயற்பாடுகள் பற்றியும் பயன் பெற்ற மக்கள் சார்பாக பிரான்ஸ் வாழ்மக்கள் வழங்கிய உதவிகளுக்கு நன்றி தெரிவித்தும் தமிழர் புனர்வாழ்வுக்கழக பிரான்ஸ் கிளைப் பிரதிநிதி த.விநாயகமூர்த்தி பேசினார்.

இந்நிகழ்வில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். இதில் இம்முறை பிரான்ஸ் மக்களும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

பிரர்ன்ஸ் மொழியில் அகிலன் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் செயற்பாடுகள் பற்றிப் பேசினார். பிரான்ஸ் தமிழ் இளையோா அமைப்பினரால் தொகுக்கப்பட்ட ஆழிப்பேரலை அழிவுக்காட்சிகள் பிரெஞ்சு மொழி பெயர்ப்புடன் திரையில் காண்பிக்கப்பட்டது. (ப)

# ஈழத் தமிழர்கள் தங்கியுள்ள அகதி முகாமில் தீ விபத்து

(புதுடில்லி)

இந்தியாவிலுள்ள ஈழத்தமிழர்களின் அகதிமுகாமில் நேற்று பாரிய தீ விபத்து ஏற்பட்டதில் பல குடியிருப்புகள் முற்று முழுதாக தீயில் அழிந்துள்ளன. இந்தியாவின் தமிழ்நாட்டிலுள்ள அம்பிர் பிரதேசத்திலுள்ள ஈழத் தமிழர்களின் அகதிமுகாமே தீவிபத்திற்கு உள்ளானதாகத் தெரிய வருகிறது.

இந்த விடயம் தொடர்பாக வேலூர் பணிப்பாளர் கோபாலரத்னம் தகவல் வெளியிடுகையில், அகதிமுகாமிலுள்ள ஒரு சமைய லறைக்குள் ஏற்பட்ட தீ அகதிமுகாமில் பரவலாகப் பரவ ஆரம்பித்தது, ஈழத் தமிழர்கள் அனைவரும் முகாமைவிட்டு உயிர் காக்க ஓட்டம் எடுத்தனர். உடனடியாகத் தீயணைக்கும் படையினர் வரவழைக்கப்பட்டனர். பலமணிநேர போராட்டததின் பின்னர் தீ கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டதாக தெரிவித்தார். சேத விபரம் எதுவும் இதுவரை தெரியவரவில்லை. (ந)

# ஜனாதிபதியின் உரை குறித்து தற்போது பலத்த சர்ச்சை!

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணி அரசிலிருந்து விலக விரும்பினால் விலகிச் செல்லலாம் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நிட்டம்புவ பிரதேசத்தில் ஆற்றிய உரை தொடர்பாக தற்போது பலத்த சர்ச்சை கிளம்பியுள்ளது.

இலங்கையின் ஒரு பகுதிக்கு பிரபாகரன் உரிமை கோருவதனால், அந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது அவசியம் என்று ஜனாதி பதி உரையில் குறிப்பிட்டதாக கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இதை ஜனாதிபதி செயலகம் மறுத்துள்ளது. ஜனாதிபதி தனது உரையில் பிரபாகரன் என்ற பெயரையே பாவிக்கவில்லை என்றும், இலங்கையின் ஒரு பகுதிக்கு யாரும் உரிமை கோருவதாக ஜனாதிபதி குறிப் பிடவில்லை என்றும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், இதே கூட்டத்தில், நாட்டின் சமாதான நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பை வெளியிட்டு வரும் அரசாங்கத்தின பங்காளி கட்சிகள் தாம் விரும்பினால் அரசாங்கத்தில் இருந்து விலகிச் செல்லலாம் என ஜனாதிபதி குறிப்பிட்டதாக கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இதை உறுதி செய்துள்ள ஜனாதிபதி செயலகம், மக்கள் விடுதலை முன்னணி என்ற ஒரு கட்சியின் பெய ரைக் குறிப்பிட்டு ஜனாதிபதி சொல்லவில்லை என்றும், ஆனால் கூட்டணியில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சியையும் குறித்தே ஜனாதிபதி இப்படிச் சொன்னதாகவும் ஜனாதிபதி செயலகம் உறுதிப்படுத்தியுள்ளது.

இதுகுறித்து மக்கள் விடுதலை முன்னணியினர் இதுவரை எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை. (ந)

## திருட்டு

கோப்பாய் மத்திப் பகுதியில் கடந்த சில நாட்களாகத் திருடர்களின் தொல்லை அதிகரித்து வருகின்றன. அந்த வகையில் கடந்த வாரம திருமண வீடு ஒன்றுக்குச் சென்று திரும்பிய குடும்பப்பெண் ஒருவருடைய 3பவுண் சங்கிலியும் வீதியால் சென்று கொண்டிருந்த வயோதிப மாது ஒருவருடைய 2 பவுண் சங்கிலியும் வீதியால் சைககிளில் வந்து கொண்டிருந்த இளம் பெண் ஒருவருடைய சங்கிலியும் திருடர்களால் அறுக்கப்பட்டுள்ளன.இதனால் இவ் வீதியைப் பயன்படுத்த மக்கள் பீதியடைந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ப)

அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தாற் செயின் - குறள்

வலம்புரி

## தமிழ்க் கூட்டமைப்பின் ஆதரவை ஜனாதிபதி நாடவேண்டும்!

சமாதான முயற்சிகளுக்கு ஜே.வி.பியே தடையாக உள்ளது என்ற தகவலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நாசூக்காக கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் இக்கூற்று எதிர்பார்க்கப்பட்டது எனினும் இவ்வளவு தூரம் விரைவாக அத்தகவல் வெளிவருமென யாருமே எதிர்பார்க்கவில்லை.

அதேநேரம் சமாதான முயற்சிக்கு தடையாகவுள்ள கட்சிகளில் ஜே.வி.பியும் ஒன்று என்பதை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இவ்வளவு காலம் கடந்து உணர்ந்து கொண்டமை ஒரு நாட்டின் தலைமைப்பதவியில் இருக்கக்கூடிய ஒரு வருக்கு அழகல்ல என்பதை மக்கள் பேசிக் கொள் கின்றார்கள்.

எதுவாயினும் ஐக்கியதேசிய முன்னணி அரசை பதவியில் இருந்து நீக்குவதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஜே.வி.பியின் உதவியை நாடியமை அவர் விட்ட பெருந்தவறாகும்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஜே.வி.பியுடன் இணைந்துகொள்வதற்கு கட்சியின் உயர்மட்ட உறுப்பினர்கள் பலத்த எதிர்ப்பு தெரிவித்திருந்தனர். இருந்தும் அந்த எதிர்ப்பை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொருட்படுத்த தவறிவிட்டார். இது அவரிடம் இருக்கக்கூடிய மிகப்பெரும் குறைபாடுகளில் ஒன்றாகும்.

அதாவது கட்சியின் மூத்த உறுப்பினர்கள் கூறுகின்ற ஆலோசனைகளுக்கு ஜனாதிபதி மதிப்பளித்திருப்பாராயின் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஜே.வி.பியுடன் கூட்டுச்சேரவேண்டிய தேவைப்பாடு அறவே இருந்திருக்கமாட்டாது.

அது மட்டுமன்றி, சமாதான முயற்சிகளில் பெரு விருப்புக்கொண்டிருந்த பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் போன்றவர்களையும் ஜனாதிபதி இழந்திருக்கமாட்டார்.

மூத்த அரசியல்வாதிகள் மற்றும் சமாதானத்தை விரும்புகின்றவர்களின் நல்ல ஆலோசனைகளுக்குதடைவிதிக்கின்றபோது அதனால் ஏற்படுகின்ற விளைவு எதிர்மறையானதாகவே இருக்கும்.

அந்தநிலைமையையே ஜனாதிபதி தற்போது அனுபவித்து வருகிறார். இலங்கையின் அடுத்த ஜனாதிபதித் தேர்தலின் தான் போட்டியிட்டு வெல்ல வேண்டுமென்ற ஒரேகாரணத்திற்காக அனுரா பண்டாரநாயக்கா தீட்டிய திட்டமே ஜே.வி.பியுடன் சுதந்திரக்கட்சி கூட்டுச்சேரும் திட்டமாகும்.

ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்வதன் மூலம் அடுத்த ஜனாதிபதியாக தான்வரமுடியும் என்ற ஒரே காரணத்திற்காக ஜே.வி.பியின் செயற்பாடுகள் பற்றி எதுவுமே சிந்திக்காமல், சிறிலங்கா சுதந்திரக்கட் சியுடன் ஜே.வி.பியை இணைத்துக் கொள்ளுமாறு அநுரபண்டார நாயக்கா தனது சகோதரியான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு அழுத்தம் கொடுத்தார்.

ஜனாதிபதியும் ஆட்சியைக் கைப்பற்றும் பேராசையில் கூடாத கூட்டத்துடன் கூடிக்கொண்டார் இப்போது ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியின் ஆட்சிக்கு ஜே.வி.பியே ஆபத்தாக அமைந்து விட்டது.

தனது அரசுக்கு ஜே.வி.பி கெடுதல் செய்யப் போகிறது என்பதை உணர்ந்துகொண்ட பின்னரே ஜே.வி.பி சமாதானத்தைக் குழப்பு வதாக ஜனாதி பதிதகவல் வெளியிடத் தொடங்கியுள்ளார்.

இந்நாட்டின் பிறந்த குழந்தைகூட சமாதானத்தை ஜே.வி.பியே குழப்புகிறது என கூறும் அளவிற்கு வெளிப்படையாக தெரிந்த ஓர் உண்மையை. தனது சொந்த நலனுக்காக மறைத்த ஜனாதிபதி சந்திரிகா தற்போது தனது வாயால் ஜே.வி.பி பற்றி கூறும் அளவிற்கு நிலைமை வந்து விட்டது.

எதுவாயினும் ஜே.வி.பியை தூக்கிஎறிவதற்கு அவர் தயாராகிவிட்டார். தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை அவர் வெளிப்படையாககோரி பெற்றுக்கொள்ள வேண்டும.

# தமிழீழ விடுதலைப்புலிகளின் வரலாற்றில் கட்டாய ஆட்சேர்ப்பு ஒருபோதும் இல்லை

### யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அனானுக்கு விளக்கம்

(யாழ்ப்பாணம்)

**விடுதலைப்புலிகள் அமைப்பினர் சிறுவர்களைத் தமது படையில் இணைத்துக் கொள்வதாக ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு மையம் வெளியிட்டு வரும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை. அவற்றை எம்மால் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது.**

**இவ்வாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரால் ஐக்கிய நாடுகள் சபைச் செயலாளர் கொபி அனானுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,**

உண்மையில் விடுதலைப்புலிகள் அமைப்பினர் தமது அமைப்பில் சேருவதற்கு ஒரு வயதெல்லையை நிர்ணயித்துள்ளார்கள் அதற்குக் குறைவான எவரையும் அமைப்பில் சேர்த்துக்கொள்வதில்லை. அதாவது 18 வயதிற்குக் குறைவான எவரையும் அமைப்பில் சேர்த்துக்கொள்வதில்லை அத்துடன அவ்வாறு வயது குறைந்தவர்களை அவர்களது பெற்றோரிடமே ஒப்படைக்கின்றார்கள் இதைவிட கட்டாயமாக எவரையும் அமைப்பில் இணைத்த வரலாறே விடுதலைப்புலிகள் அமைப்பில் இடம்பெறவில்லை.

இவ்வாறு இருக்கும் போது விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு களங்கம் ஏற்படுத்தும் நோக்குடனும் சர்வதேச சமூகத்திற்கு பொய்க் குற்றச்சாட்டுக்கள் மேற்கொள்ளும் நோக்குடனும் உண்மையான புள்ளி விபரங்கள அற்ற நிலையில் சர்வதேச அமைப்பு இவ்வாறான கருத்தினை வெளியிடுவது எமக்கு மிகுந்த கவலையளிக்கின்றது.

வடக்கு- கிழக்கில் சிறுவர்கள் படையில் இணைகின்றார்கள் என்ற கருத்தினை வெளியிடும் அமைப்பு,இந்த சிறுவர்கள நலனில்,சிறுவர்களின் முன்னேற்றத்தில் எவ்வளவு அக்கறையுடன் ஆக்கபூர்வமான செயற்றிட்டங்களை இலங்கை அரசாங்கம் கொண்டுள்ளது என்பதனை ஏன் சிந்திப்பதில்லை.

உண்மையில் வடக்கு-கிழக்கில் உள்ள சிறுவர்கள் நீண்டகாலம் தொடர்ந்த போரினால் பல்வேறுபட்ட இழப்புக்களை எதிர்நோக்கி மனரீதியாக பாதிப்புக்குள்ளான நிலையில் இருக்கின்றார்கள் எனவே சிறுவர்களின் நலனில அக்கறை கொள்ளாது வெறுமனே அறிக்கை விடுவதனை தவிர்க்க வேண்டும் யுத்தத்தினை நிறுத்தி மக்களுக்குரிய இயல்பு நிலையை ஏற்படுத்தி சிறுவர்களின் முன்னேறறததிற்கு வழியமைத்துக்கொடுப்பது பற்றிச் சிந்திக்க வேண்டுமே தவிர மாறாக இலங்கை அரசாங்கத்திற்குப் பக்கச் சார்பாக, ஒரு பக்கம் சார்ந்த கருத்தினைச் சர்வதேச அமைப்பாக இருந்து கொண்டு வெளியிடுவது எமக்கு மிகுந்த விசனத்தினை ஏற்படுத்தியுள்ளது.

விடுதலைப்புலிகள் அமைப்பு இன்று சிறுவர்களின் நலனைப் பேண என்று எத்தனை அமைப்புக்களை உருவாக்கி பாரரமாித்து வருகின்றார்கள் என்பதனை நினைவு படுத்த விரும்புகினறோம். வடக்கு-கிழக்கில் எத்தனையோ பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு ஒளிமயமான வாழ்வை ஏறபடுத்த விடுதலைப்புலிகள் பல்வேறு திட்டங்களை முன்னெடுக்கின்றார்கள்.

அத்தோடு வயது குறைந்தவர்கள் அமைப்பில் சேரும் போதும் கூட அவர்கள் விரும்பினால் வீட்டிற்கே அனுப்புகின்றார்கள் வீட்டிறகுத் திரும்பிப் போகாதவர்களுக்கு அவர்களது கல்வியில் விருத்தியை ஏற்படுத்தக் கூடியதாக பல்வேறுபட்ட வகையில் அவர்களது ஆளுமையை விருத்தி செய்யக்கூடியதாக நடவடிக்கைகளை அவர்கள் முன்னெடுக்கின்றார்கள்.

எனவே உண்மை நிலையை அறியாதவர்கள் உண்மைக்குப் புறம்பான தகவல்களை வெளியிடுவது பொருத்தமற்ற செயற்பாடு என்பதனை ஆழமாக எடுத்துக்கூறுகின்றோம் எனவே சர்வதேச சிறுவர் அமைப்பில் செயற்படும் அதிகாரிகள் நடுநிலையான கருத்துக்களையே வெளியிட வேண்டும். எனவே நடு நிலையான அதிகாரிகளை நியமிப்பதன் ஊடாகவே இவ்வாறான தவறான செய்திகளை தடுக்கமுடியும் என்பதனையும உண்மைத் தன்மையை அறிய முடியுமென்பதையும் தங்களது மேலான கவனத்திற்கு கொண்டு வர விரும்புகின்றோம். எனவே உரிய நட வடிக்கைகளை தாங்கள் எடுபீகளென நாம் எதிர்பார்க்கின்றோம் என மேலும் தெரிவக்கப்பட்டுள்ளது.(ப-04)

### புனித மரியாள் தரிசனம் பெற்ற அருட்சகோதரி உயிர்நீத்தார்

(போர்த்துக்கல்)

தேவ தாயாரான புனித மரியாள் காட்சி கொடுத்ததை சிறுபராயத்தில் கண்ட இரட்டைக்குலத்தைச் சேர்ந்த மூவரில் ஒருவரான அருட்சகோதரி லூசியா டிஜீஸஸ் போஸ் சென் செண்டோஸ் தனது 97ஆவது வயதில் கடந்த ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

போர்த்துக்கல்லின் மத்திய நகரமான கொய்ன் பிறாவில் உளள காமல் கன்னியர் மடத்தில் வைத்து இவரின் உயிர் பிரிந்ததாக கத்தோலிக்க திருச்சபை தெரிவித்துள்ளது.

1917ஆம் ஆண்டு பற்றிமா பதியில் வைத்து தனக்கும் மற்றும் 2 சிறுவர்களுக்கும் தேவதாயார் காட்சிகொடுத்ததாக அருட்சகோதரி லூசியா முன்னர் தெரிவித்திருந்தார்.

தேவதாயார் காட்சி கொடுத்தபோது 3 இரகசியங்களை இந்த 3 பேருக்கும் வெளியிட்டதாகவும் அவற்றில் இரண்டு இரகசியங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன் 3 வது இரகசியம் மிக அண்மையிலேயே பரிசுத்த பாப்பரசர் இரண்டவது அருளப்பர் சின்னப்பரினால் மறைமுகமாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

முதல் இரண்டு இரகசியங்களில் குறிப்பிடப்பட்டிருந்தவாறு சாத்தானின் கொடுமைகளும் ,இரண்டாவது உலகப் போரும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

3வது இரகசியத்தில் 20ஆம் நூற்றாண்டிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் .விடயங்கள் குறித்து தேவதாயார் அருட்சகோதரியிடம் வெளிப்படுத்தியதாக திருச்சபை விசுவாசித்துவருகின்றது.

3வது இரகசியத்தை பற்றிமா பதிக்கு 2 ஆயிரம் ஆண்டு மேலும் பரிசுத்த பாப்பரசர் சென்றிருந்தபோது வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த சந்தர்ப்பத்தில் அருட்சகோதரி லூசியாவும் கடைசித் தடவையாக பற்றிமா பதிக்குச் சென்றிருந்தார். (க-4)

### சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தினால் நடாத்தப்பட்டு வந்த யோகாசனத் தியானப் பயிற்சி வகுப்புக்களில் சித்தியடைந்தோருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி:ப 3.00 மணிக்கு நாவலர் மணி மண்டபத்தில். நடைபெறவுள்ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட உளமருத்துவத்துறைப் பேராசிரியர் தயா சோமசுந்தரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ற)

**அரசின் பாரபட்சமான நடவடிக்கைகளால்**

### எமது தலைவிதியை நாமே தீர்மானிக்க வேண்டியுள்ளது

**மூத்த தளபதி ஜெயம்**

(கிளிநொச்சி)

தென் இலங்கையில் ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு ஆட்சியாளர்களும் தமிழ் மக்களினுடைய பிரச்சினைகள் தொடர்பாக பாராமுகமாகவே செயறபட்டு வருகின்றார்கள் எனவே எதிர்காலத்தில் எமது தலைவிதியினை நாமே தீர்மானிக்க வேண்டியுள்ளது என தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த தளபதிகளின் ஒருவரான கேணல் ஜெயம் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி கண்டாவளை மகாவித்தியாலய முன்றலில் இடம்பெற்ற மாவீரர் நினைவாலயத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இதனைத்தெரிவித்தார். சுனாமி அனர்த்தத்தின் போது தாயகத்தில் ஏற்பட்ட உயிர் இழப்புக்கள் உடமையிழப்புக்கள் குறித்தும் தென்னிலங்கை அரசு பாராமுகமாக இருந்து வருகிறது. இவ்வாறான செயற்பாடுகளை முறியடிக்கும் வகையில் எமது மக்களின் செயற்பாடுகளில் மேலும் மாற்றங்கள் ஏற்படவேண்டும்.

எமக்கு எந்த வகையிலும் உதவி செய்யாத அரசை நம்பியே சர்வதேச நாடுகளும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்யவென நிவாரணப்பொருட்களை வழங்கி வருகின்றது. ஆனால் எமது பகுதிகளில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர் ஆறறும் பணிகளை சர்வதேச உலகம் வியந்து பாராட்டி வருகின்றமை எமக்கும் எமது மக்களுக்கும் பெருமையாகவே உள்ளது என தெரிவித்தார்.

கண்டாவளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மாவீரா நினைவாலயத்திறபபு விழா கண்டாவளை மகா வித்தியாலய அதிபர் சிறிதரன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டதைத்தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியினை சாள்ஸ் அன்ரணி படையணியின் சிறப்புத் தளபதி நகுலன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து நினைவாலயத்தில் வைக்கப்பட்டிருந்த 46 மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கும் மலர் வணக்கம் செலுத்தப்பட்டது. தொடர்ந்து இடம்பெற்ற அரங்க நிகழ்வில் கடடளைத்தளபதி கேணல் ஜெயம்,கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் ப. அரியரத்தினம்,அரங்க செயற்பாட்டுக் குழுவின விந்தன் ஆகியோர் உட்பட பலர் சிறப்புரை ஆற்றினார். மாவீரர் நினைவான நூல ஒன்றும இந்நிகழ்வில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

போராளிகள்,கிராம மக்கள், மாவீரர்களின் பெற்றோர்கள் உறவினர்கள் எனப் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (க-4)

### தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

**எதைத்தான் நீங்கள் செயல்முறை மதம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? கடவுள்தான் நம்மைக்காப்பாற்ற வேண்டும். தூய இதயம் படைத்தவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் இறைவனைத் தரிசிப்பார்கள். இதற்கு என்ன பொருள்? தெருக்களைச் சுத்தம் செய்வதும் மருத்துவமனைகள் கட்டுவது என்பதெல்லாமா? நீங்கள் தூய மனத்துடன் செய்தால் அவை நல்ல காரியங்கள் அவ்வளவுதான்.**

**சுவாமி விவேகானந்தர்**

## மணிலால் யாழ். வருகிறார்

(சுண்டுக்குளி)

உதைபந்தாட்டத்தின் 'கோட் பாதர்' என்றழைக்கப்படும் ஆசிய உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் உபதலைவரும் அகில இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளருமான மணிலால் பெனான்டோ நாளை மறுதினம் யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

இவரின் யாழ்.விஜயத்தை முன்னிட்டு நாளை மறுதினம் பிற்பகல் 4 மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நான்கு காட்சி உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இதில் குருநகர் சென்றோக் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஊரெழு றோயல் அணியும் பாசையூர் சென்அன்ரனி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ச-110)

## சதொச ஊழியர்கள் இன்று போராட்டம்

(யாழ்ப்பாணம்)

சம்பள உயர்வு வழங்கக்கோரி சதொச ஊழியர்கள் தேசிய மட்டத்தில் இன்று வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

வரவு செலவுத் திட்டத்தின் பிரகாரம் அதிகரிக்கப்பட்ட 2 ஆயிரத்து 500 ரூபாவை உடனடியாக வழங்கக்கோரியும், சதொச நிறுவனத்தை அரசு முழுமையாகப் பொறுப்பேற்றவேண்டும் என்பதை வலியுறுத்தியும் இப்போராட்டம் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாட்டை அனைத்து நிறுவன ஊழியர் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. (ச)

### அரசு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கும்

## கடற்கரையில் 100 மீற்றருக்கு அப்பால் வீடுகளை அமைக்குக

கடற்கரையிலிருந்து 100 மீற்றர் தூரத்திற்கு அப்பால் வீடுகள் அமைப்போருக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்கப்படும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார். இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் நிதியுதவி அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதியுதவியுடன் அமைக்கப்படும் வீடுகளுக்கும் வழங்கப்படும். அதேவேளை இத்தொகைக்கு மேலதிகமாக 2 வீத வட்டியில் கடனை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடற்கரையிலிருந்து 100 மீற்றர் தூரத்திற்குள் கட்டடங்களை அமைக்கத் தடைவிதிக்கப்பட்டுள்ள தீர்மானத்தில் எந்தவித மாற்றமும் இல்லையென்றும் பிரதமர் தெரிவித்தார். (ச-8)

## கச்சதீவு அந்தோனியார் ஆலய பக்தர்களுக்கான ஒழுங்குகள்

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த விழாவிற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பான கூட்டம் நேற்று யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பின்வரும் விடயங்கள் ஆராய்ந்து முடிவுசெய்யப்பட்டன.

கடந்த 31 ஆம் திகதி கலந்துரையாடப்பட்ட ஒலி, ஒளி, தற்காலிக மலசலகூடங்கள், சுகாதார வசதிகள், தற்காலிக கொட்டகைகள், நீர்விநியோகம், பிரயாண வசதிகள் என்பன குறித்து இறுதி முடிவுகள் எடுக்கப்பட்டன.

இன்று முற்பகல் 9 மணிக்கு குறிகட்டுவான் இறங்குதுறையிலும் நெடுந்தீவிலும் படகுகளுக்கான தகுதிச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

உற்சவத்தில் கலந்துகொள்ளவிருக்கும பக்தர்கள் தேசியஅடையாள அட்டையை தம்முடன் கொண்டுவருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

குறிகட்டுவானிலிருந்தும், நெடுந்தீவில் இருந்தும் செல்லும் பக்தர்களைத் தவிர்ந்த ஏனைய இடங்களிலிருந்து புறப்படும் பக்தர்கள் பாதுகாப்புக் கருதி குறிகட்டுவானில் அல்லது நெடுந்தீவில் தம்மைப் பதிவுசெய்துகொள்ளவேண்டும். (ச-19)

## டிரோன் பெர்னாண்டோ இன்று யாழ். வருகிறார்

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னான்டோ இன்று யாழ். வரவுள்ளார்.

யாழ். வரும் அவர் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண நடவடிக்கைகள் குறித்து யாழ். அரச அதிபர் உட்பட திணைக்களத் தலைவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரை இன்று கச்சேரியில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

## படகுகள் திருத்த நிலையம் திறப்பு

படகுகள் திருத்தச் சேவைகள் நிலையமொன்று மாதகலில் இன்று காலை 10.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த நிலையத்தை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் திறந்துவைக்கவுள்ளார். (ச)

## மண்டைதீவில் இன்று விளையாட்டுப்போட்டி

(மண்டைதீவு)

யாழ். மண்டைதீவு மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி மண்டைதீவு மகாவித்தியாலய மைதானத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் சு.கனகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தீவகக் கல்விவலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் வ.இராதாகிருஷ்ணன் கலந்துகொள்ளவுள்ளார். (ச-4)













## கிளிநொச்சியில்...

குழு செயலக முன்றலில் சங்மித்தது. அங்கு மனுகையளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கிளிநொச்சி வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத்தைச் சேர்ந்த அ.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில் கிளிநொச்சி வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத்தைச் சேர்ந்த அ.வேழமாலிகிதன், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கண்டன உரைகளை ஆற்றினர்.

பின்னர், கிளிநொச்சி அரச செயலகத்தில் மேலதிக அரசதிபர் எஸ்.வேதநாயகத்திடமும் தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தில் போராளி செல்வியிடமும் மகஜர்கள் கையளிக்கப்பட்டன. (இ)

## மன்னாரில்...

இதற்காக மன்னார் நகரில் பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. இதனால் அங்கு அச்சநிலை காணப்பட்டது.

(இ-4)




## ஐ.ம.சு. முன்னணி அரசில்...

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான லடாய் கூட்டு முன்னணி அரசின் ஆட்சிக்கு வேட்டு வைக்கப் போகின்றது என்று பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்ட நிலையில், ஜே.வி.பி தனது நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்விடயம் குறித்து இராமலிங்கம் சந்திரசேகரன் எம்.பி மேலும் குறிப்பிடுகையில்,

கூட்டுமுன்னணி அரசில் எத்தகைய கருத்து முரண்பாடு இருந்தாலும் அரசாங்கத்தில் இருந்து விலகிப்போகும் எண்ணம் ஜே.வி.பிக்கு இல்லை.

இவ்விடயம் தொடர்பாக ஜேவிபி எந்தவொரு தீர்மானத்தையும் இதுவரை எடுக்கவில்லை சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைந்து நாம் ஆட்சியமைத்துள்ளோம். இருப்பினும் எமக்குள் நிறைவான ஒற்றுமை இருப்பதாக நாம் கூறவில்லை. எமக்குள்ளே கருத்து வேறுபாடுகள் நிறையவே இருக்கின்றன ஆனால் அதற்காக நாம் ஆட்சியை முறிக்கவோ அரசைக் கலைக்கவோ முனைய மாட்டோம்.

எமக்குள் இருக்கும் முரண்பாடுகளுக்கும் கருத்து வேறுபாடுகளுக்கும் ஒரு தீர்வினைக்காண முடியும் என்று நாம் நம்புகின்றோம்.

நாம் நாட்டு மக்களின் வாக்குப்பலத்தால் ஆட்சியை அமைத்திருக்கின்றோம் இதனால் ஒருபோதும் மக்களின் நம்பிக்கையை சீர்குலைக்க மாட்டோம். மக்கள் நன்மைபெறக் கூடியவகையில் வெற்றிகரமாக அரசாங்கத்தை வழிநடத்திச் செல்லவே பாடுபடுவோம்.

கடந்த ஐக்கியதேசியக்கட்சின் ஆட்சிக் காலத்தில் நாட்டை முற்றுமுழுதாக சீர்குலைக்கின்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இந்த நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவதற்காகவே நாங்கள் சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைந்து மக்களுக்கு சார்பான முடிவுகளை எடுப்பதற்காக ஆட்சியமைத்தோம். அதுதான் எங்களுடைய பிரதான இணக்கப்பாடாக இருந்தபோதும் விடுதலைப்புலிகளின் எதிர்கால நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதும் எமது குறிக்கோளாகவே இருந்தது. இந்த இணக்கப்பாடுகளுக்கேற்ப நாட்டுக்கு பாதகமான முடிவுகளை இதுநாள்வரையில் அரசு எடுக்கவில்லை என்றும்,

ஜனாதிபதிக்கும் தமக்கும் வெகுவிரைவில சுமூகமான உறவு உருவாகும் என்றும் சந்திரசேகரன் எம்.பி நம்பிக்கை வெளியிட்டார். (இ-04)

## கூட்டுறவாளர்கள்...

ஆகியோரும் மகஜர்கள் கையளித்தனர்.

இதனையடுத்து பேரணி யாழ். மாவட்ட செயலகத்தை சென்றடைந்து அங்கு அரச அதிபர் கே. கணேசிடம் மகஜர் கையளிக்கப்பட்டது. (ச-19-130)

## மட்டக்களப்பில்...

கொக்கட்டிச்சோலை சந்தியில் அப்பிரதேசத்திலுள்ள அனைத்து கிராமங்களையும் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்றுகூடி பட்டிப்பளை பிரதேச செயலகத்தை நோக்கிப் பேரணியாகச் சென்றனர். இப்பேரணியில் கலந்துகொண்டவர்கள் இப்படுகொலைக்கான பொறுப்பை இலங்கை அரசு பொறுப்பேற்க வேண்டும். எதிர்காலத்தில் இத்தகைய படுகொலைகள் நிறுத்தப்பட வேண்டும் உட்பட சில வாசக அட்டைகளை ஏந்தியவாறு காணப்பட்டனர். பேரணி முடிவில் பிரதேச செயலாளரிடம் இது தொடர்பான மகஜர் ஒன்று ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதற்காக கையளிக்கப்பட்டது. (இ)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.02.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.